# முன்னட்டை

(நல்லூர் கந்தசுவாமி கோவிலும் ஆறுமுகங்களுடன்
முருகன் படமும்)

# பிரம்மமாய் நின்றசோதி

**பாகம் - 01**

**தமிழறிஞர்**

**கே.வி. குணசேகரம்**

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | :- | பிரம்மமாய் நின்றசோதி |
| நூலாசிரியர் | :- | தமிழறிஞர்<br>கே.வி.குணசேகரம் |
| பதிப்பாண்டு | :- | 2010.03.25 |
| மொத்தப் பக்கங்கள் | :- | |
| விநியோகம் | :- | லங்கா புத்தகசாலை<br>F.L 1.14, டயஸ் பிளேஸ்<br>குணசிங்கபுர,<br>கொழும்பு – 12 |
| தொ.பேசி | :- | 011-2341942 |
| விலை | :- | |

# என்னுரை

“பிரம்மமாக நின்ற சோதிப் பிழம்பு தான் ஆறு திருமுகமும் பன்னிரு திருக்கரங்களும் பெற்று முருகனாக அவதரித்தது” என்று கச்சியப்ப சிவாச்சாரியார் கூறியுள்ளார்.

நக்கீரர் ஆறுதிருமுகங்களின் பெருமையையும் கூறியுள்ளார். இதைவிட அருணகிரிநாதர் ஆறுதிருமுகங்களுக்கும் விளக்கம் கூறியுள்ளார். மெய்ஞானிகள் கூறியவற்றைப் பின்வந்தோர் அப்படியே கூறிவந்தனர். இது எல்லோருக்கும் தெரியும்.

இந்த வகையில் இந்து தத்துவங்களை ஆராய்ந்த போது நான் ஆறுதிருமுகங்களைப் பற்றியும், அவற்றிலிருந்து பல உண்மைகளையும் கண்டுகொண்டேன். நெருப்பிருந்தால் புகை இருக்கும். மணியோசை கேட்டால் கோயில் இருக்கிறது என்று தெரியும். இது போலப் புராணங்கள், இதிகாசங்கள், இந்து தத்துவ நூல்களில் இருந்து நான் கண்டுகொண்ட முகங்களைப் பற்றி இந்நூலில் கூறியுள்ளேன்.

ஆறுதிருமுகங்களும் ஆறு தெய்வங்கள் ஆகும், வேல் சிவனும் உமையும் சேர்ந்த உருவம். வேல் சிவசக்தி. அதாவது திருவருள். மயில் விநாயகன். வேலும் வள்ளி தெய்வயானையும் மயிலில் இருந்தால் அது சிவனின் குடும்பம். வேல் படைக்கலமல்ல. வேல் சிவனும் உமையும். சில கோயில்களில் மயில்வாகனத்தில் வேலையும் வள்ளி தெய்வயானையையும் வீதியுலாக் கொண்டு செல்கின்றனர். இது குடும்பத்துடன் அடியவர்களுக்கு அருள முருகன் உலாச் செய்கிறான்.

மயிலில் வேலுடன் முருகன் பவனி வந்தால் அது சோமஸ்கந்த உலா.

முருகனின் ஆறு திருமுகங்களில் பின்வரும் தெய்வங்கள் உறைந்திருக்கின்றன. சிவன் ஒருமுகத்திலும், உமாதேவியார் ஒரு முகத்திலும், கதிரவன் ஒரு முகத்திலும், கண்ணன் ஒருமுகத்திலும், விநாயகர் ஒரு முகத்திலும் இருக்கிறார்கள். ஒரு திருமுகம் முருகனுக்குரியது. ஆறு

திருமுகங்களையும் வணங்கினால் சன்மதத் தெய்வங்களின் அருள் கிடைக்கும்.

சிவன் தான் முருகன். திருவருளான வேல் தான் சூரனை அழித்தது. அதாவது சூரனின் ஆணவத்தை அழித்து அவனின் ஆன்மாவைச் சேவலும் மயிலுமாக்கிக் கொண்டது. இந்த வகையில் முருகன் சங்கார முருகனாகவும் செயற்படுகிறான். இதை நான் சொல்லவில்லை. இந்து தத்துவங்கள் சொல்கின்றன. கணித பாடத்தில் தேற்றம் நிறுவுவது போல இவற்றை நான் நிறுவியுள்ளேன். யாரும் இதை விமர்சிக்கலாம். எதிர்பார்ப்புக்களுடன் இருக்கிறேன்.

நாட்டிலுள்ள சமயப் பெரியவர்கள், இந்துமாமன்றங்கள், கோயில்கள், இந்துக் கலாச்சாரத் திணைக்களம் என்பன எனது நூல்கள் பற்றிக் கருத்துக்கள் கூறுதல் வேண்டும். இவை தமது இருப்பை இதன் மூலம் வெளிக்காட்டிக்கொள்ளல் வேண்டும். இதுவரை எனது ஐம்பது சமய தத்துவ நூல்களைப் பற்றிக் கருத்துக்கூறாமையால் தான் இதைப் பகிரங்கமாகக் கூறுகிறேன்.

வழமையாக நான் இந்து தத்துவங்களைத் தொடர்நூல்களாக வெளியிடுவது வழக்கம். அது போல இந்நூலையும் தொடர் நூல்களாக வெளியிட எண்ணியுள்ளேன். வழமையாக எனது நூல்களின் எழுத்துப்பிழைகளை நீக்கித் தருகின்ற ஓய்வு பெற்ற அதிபர்களான திரு. வா. ஜெயரத்தினம், திரு. தி.கிருஸ்ணகுமார், கலாவித்தகர் செல்வி. ப. இறைமகள் ஆசிரியை ஆகியோருக்கும், எனது நூல்களைக் கணனி மயப்படுத்தித்தரும் செல்வி. க.தேனமிர்தம் அவர்களுக்கும், இந்நூலை வெளியிடும் கொழும்பு 12இல் உள்ள லங்கா பதிப்பகத்தினருக்கும் நன்றி கூறிக்கொள்கின்றேன்.

வணக்கம்.

கே.வி. குணசேகரம்.
ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப்பணிப்பாளர்.
கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம்.

பிள்ளையார் கோயிலடி
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

# அணிந்துரை

தங்கள் கைப்பட எழுதிய நூல்களைப் படிக்கும் போது தாங்கள் வடமொழி, தென்மொழி இரண்டிலும் மிகத்தேர்ச்சி பெற்றவராகத் தெரியவருகின்றது. வேதாகமங்களைஐயம் திரிபுரக் கற்றிருக்கிறீர்கள். இந்து நாகரிகத்தின் கலைத்திட்டத்தினை அறிந்திருக்கிறீர்கள். அத்துடன் வெள்ளைக்காரப் பாவாடைச் சுவாமிகள் எழுதிய Hinduism In Ceylon, Hinduism in India ஆகிய நூல்களையும் கற்றிருக்கிறீர்கள். அத்துடன் திருக்குறள் பகவத்கீதை, சிவஞானபோதம், திருவருட்பயன், திருமந்திரம். ஆகிய நூல்களையும் ஆராய்ந்து கடினமான தத்துவங்களையெல்லாம் மிகவும் எளிமைப்படுத்தி மாணவர்கள் கற்க வழிசெய்துள்ளீர்கள்.

உள்களது அலுவலகமும் இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ளது. எந்த விதமாகப் பார்த்தாலும் உங்களுக்கு இந்து சமயத்தில் பூரணமான அறிவிருக்கிறது. அதனால் நீங்கள் இந்துசமயத்தை உங்கள் சமயமாக ஏற்று அதன் பெருமையை உலகில் பரப்பும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறீர்கள். ‘இன்பத்தை அள்ளித்தரும் இந்துமதம்’ என்ற நூலில் உள்ள விடயங்களை இப்படி உங்களைத் தவிர வேறு எவரும் எழுதியிருக்க முடியாது. சேக்கிழார் எழுதிய பெரியபுராணத்தை விட நீங்கள் ஒரு மேலான சமயியாக, ஆழ்ந்த அறிவும் உணர்வும் கொண்டவராகக் காணப்படுகிறீர்கள். இன்னும் வயது முதிர நீங்கள் ஒரு ஞானியாக சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர் அவர்களைப் போல ஒரு நாயன்மார் பட்டம் பெறுவதற்கு எற்ற மிகவுயர்ந்த பட்டமும் பெறுவீர்கள் போல. ஆனால் சில தமிழ் நூல்களை நீங்கள் தேடிப்படிக்க வேண்டும். திருவாசகம், திருக்கோவையார், திருக்களிற்றுப்படியார், திருமந்திரம் போன்ற நூல்கள் இன்னும் ஆய்வுக்குரியன. இந்நூல்களின் ஆசிரியர்கள் இன்பத்தை அள்ளித் தரும் இந்து

மதம் பற்றிய பல கருத்துக்களைச் சொல்லியுள்ளனர். அவற்றைப் படித்து அதிலுள்ள தத்துவங்களையும் சிறுவர்களுக்குப் புரியும் படியாக எழுதுங்கள். சிறுவர்கள் தான் எதிர்கால மன்னர்களாகையால் அவர்கள் சிறுவயதிலேயே சமய உண்மைகளைப் புரிந்துகொள்ளல் வேண்டும் என்று நினைக்கும் உங்கள் சிந்தனை வெற்றிபெறச் சிவனருள் என்றும் இருக்கும்.

ஈ, குதிரையிடம் தனது பெயரைக் கேட்டது போல எதிர்காலச் சமுதாயம் உங்களிடமிருந்து தான் அனைத்தையும் கேட்கவுள்ளது. இந்து சமயத்தை அறுசமயம் என்றும் சொல்லலாம். எனவே அறுசமயத் தத்துவங்களையும் எளிமைப்படுத்துங்கள். சிவன் இந்து சமயத்திலே ஆறில் ஒரு பகுதியையுடையவர். நாங்கள் பிரமா, விஷ்ணுக்களோடு முப்பத்துமூன்று தேவர்களையும் பூசித்து வழிபடுகிறோம் என்ற உண்மை எதிர்காலச் சமுதாயத்திற்குத் தெரிதல் வேண்டும். சமயத் தத்துவங்களை இலகுபடுத்துவது தான் உங்கள் இன்பம் என அறிந்துகொண்டேன். அந்த இன்பம் தான் நமச்சிவாய.

வாழ்க சிவன் நாமம்.

கணபதி மகேசன்
ஓய்வு பெற்ற கல்வி நிர்வாகசேவை தரம் II
6, இராணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

# பிரம்மமாய் நின்றசோதி

①

**ஆ**றுமுகக் கடவுள் முருகன். அவன் அடியவர்களுக்கு ஆறுதிருமுகங்களினால் அருளளிப்பவன். ஒரு திருமுகத்தின் அருளே கடலை விடப்பெரியது. அப்படியிருக்கையில் ஆறுதிருமுகங்களால் அவன் அருளினால் எப்படி இருக்கும்?. அவ்வருளின் பெருமைகளைப் பேசவும் முடியுமா...?

இறைவன் அன்பு மயமானவன். அவன் பேரின்பக்கடல். அத்தகைய அன்பு மயமான பேரின்பக்கடலான இறைவனை வணங்கி அவனது மனதைக் குளிரச் செய்து அடியவர்கள் வேண்டிய வரங்களைப் பெற்று வருகின்றனர்.

முருகன் அழகானவன்; குழந்தை மனம் கொண்டவன். அதனால் அடியவர்கள் தமது செயல்களால் முருகனது மனதை மகிழ்வித்து வேண்டிய வரங்களை மிகவும் விரைவாகப் பெற்றுக் கொள்ளலாமென்று ஞானிகள் கூறுகின்றனர்.

முருகனுக்கு ஆறுமுகங்கள் உண்டென்று புராணங்கள் தொடங்கி இன்று வரை எழுந்த முருகனைப் பற்றிய நூல்கள் கூறுகின்றன.

ஆறுமுகங்களும் அடியவர்களின் குறைகளைத் தீர்த்து, அவர்களது மனதை மகிழ்ச்சிக்குள்ளாக்கி, அவர்கள் வேண்டிய வரங்களைக் கொடுப்பதற்காகவே காத்திருக்கின்றன.

அடியவர்களுக்கு அள்ளிக் கொடுக்க முருகனின் பன்னிரு கரங்கள் காத்துக் கிடக்கின்றன. அருள்செய்யப் பன்னிரு விழிகள் காத்திருக்கின்றன.

அடியவர்கள் விரும்புவதற்கு மேலாக முருகன் தனது பன்னிரு கரங்களாலும் அள்ளி அள்ளிக் கொடுப்பானென்று தமிழ் இலக்கிய நூல்கள் யாவும் கூறுகின்றன.

பன்னிரு விழிகள் அருள, பன்னிரு கரங்கள் அள்ளிக்கொடுக்க, ஆறுதிருமுகங்கள் அடியார்களை ஆசீர்வதிக்கும்.

ஆறுமுகங்களுக்கும் ஆறுபொருள்கள் உண்டென்று பண்டைய நூல்கள் கூறுகின்றன. அவற்றின் செயல்கள் வேறுபட்டிருப்பினும் பயன் ஒன்றே என்று துணிந்து கூறலாம்.

அருணகிரிநாதர் முருகனது ஆறுதிருமுகங்கள் பற்றியப் பின்வருமாறு கூறுகிறார்.

"ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே!"

நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் பின்வருமாறு கூறுகிறார்.

"தாவில் கொள்கைத் தம்தொழில் முடிமார்
மனன் நேர்பு எழுதரு வாள்நிற முகனே"

மனமுருகி வரம் வேண்டுவோர் தியானஞ் செய்தால் அத்தியானம் செய்பவர்களின் மனதில் சென்றமர்ந்து ஒளி பொருந்திய தனது முகங்களால் முருகன் அவர்களுக்கு அருளளிப்பான்.

''மாஇருள் ஞாலம் மறுஇன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம்; ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகிக்
காதலின் உவந்து வரம்கொடுத்தன்றே; ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ

அந்தணர் வேள்விஓர்க் கும்மே; ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏம்உற நாடித்

திங்கள் போலத் திசைவிளக்குமே; ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட்டன்றே; ஒருமுகம்

குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகைஅமர்ந்தன்றே; ஆங்கம்
மூவிரு முகனும் முறைநவின்று ஒழுகலின்,
ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பில்
செம்பொறி வாங்கிய மொய்ம்பின் சுடர்விடுபு;"

துன்ப இருள் பொருந்தியது இவ்வுலகம், அத்துன்ப இருள் நீங்கி இன்பம் பெற அவனது திருமுகத்திலிருந்து ஒளிக்கதிர்கள் விரிந்து செல்லும்.

பக்தர்கள் போற்றிப் புகழ்ந்து துதித்து வணங்கும் போது மிகவும் மகிழ்ந்து விருப்புடன் வரங்களை அளிக்கும் முகம் ஒன்று.

வேத முறைப்படி விதிமுறை வழுவாது அந்தணர்கள் செய்யும் யாகங்களுக்கு இடையூறுகள் ஏற்படாது காத்து அதை நிறைவேற்றி வரமளிக்கும் ஒன்று முகம்.

நூல்களாலும் ஆசிரியர்களாலும் விளக்க முடியாதவற்றை முருகனிடம் முறையிட்டால் அவர்களது குறைகளை நீக்கி விளக்கமளித்து அடியவர்களின் மனதைக் குளிரப் பண்ணும் சந்திரனது ஒளிக்கதிர்களைக் கொண்டது ஒரு முகம்.

கொடும்போர் செய்வோரை அழித்து, கொடிய போர்கள் வராது காத்து, நீதியை நிலைநாட்டுவது ஒரு முகம்.

குறமடமகளான வள்ளியோடு சேர்ந்து அடியவர்களுக்கு இன்பத்தை அள்ளித்தருவது ஒரு முகம்.

இவ்வாறு ஆறு திருமுகங்களும் அடியவர்களது துன்பங்களைப் போக்கி அவர்களுக்கு வேண்டிய வரங்களை அளித்து, அடியவர்களை மகிழ்ச்சிக்குள்ளாக்கிப் பேரின்ப மயமான முத்தியின்பத்தை என்றும் கொடுக்கும்.

இதுபோலவே முருகனின் பன்னிரு கைகளும் அடியவர்களின் குறைகளைப் போக்குகின்றன.

"வண்புகழ் நிறைந்து வசிந்து வாங்கு நிமிர்தோள்

விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது
ஒருகை; உக்கம் சேர்த்தியது ஒருகை;
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇயதுஒருகை;
அங்குசம் கடாவ ஒருகை; இருகை

ஐயிரு வட்டமொடு எஃகுவலம் திரிப்ப! ஒருகை
மார்பொடு விளங்க; ஒருகை
தாரொடு பொலிய; ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப; ஒருகை
பாடுஇன் படுமணி இரட்ட; ஒருகை

நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய; ஒருகை
வான்அர மகளிர்க்கு வதுவை சூட்ட; ஆங்கப்
பன்னிருகையும் பாற்பட இயற்றி,
அந்தரப் பல்இயம் கறங்கத் திண்காழ்
வயிர் எழுந்து இசைப்ப, வால்வளை ஞரல,
உரம்தலைக் கொண்ட உரும்இடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ,
விசும்பு ஆறாக விரைசெலல் முன்னி;
உலகம் புகழ்ந்த ஓங்குஉயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே அதாஅன்று''.

வானவீதியால் செல்கின்ற ரிஷிகள், தேவர்கள், முனிவர்கள் முதலியோரைப் பாதுகாத்து அருள் செய்வது மேலே எழுந்த ஒருகரம்.

அழகு பெற்ற செவ்வாடையை உடுத்திய முருகனின் துடையின் மேல் இருப்பது ஒருகரம். அங்குசத்தை வைத்திருப்பது இன்னொரு கரம். அக்கரத்தால் தான் அங்குசத்தைச் செலுத்தி வினைகளை அழிப்பார்.

ஒரு கரம் கேடயத்தை வைத்திருப்பது, இன்னொரு கரம் வேலாயுதத்தை வைத்திருப்பது. அடியவர்களுக்கு நேர்கின்ற துன்பங்களைத் தடுப்பது கேடயத்தை வைத்திருக்கும் கரம். வேலிருக்கப் பயமில்லை என்றருளுவது வேல் வைத்திருக்கும் கரம்.

இவ்விருகரங்களும் அந்தணர்களாற் செய்யப்படும் வேள்விகளை ஏற்று அருளும் முகத்திற்குரியன.

அசுரர்கள் வந்து வேள்வியை அழிக்காமல் காத்து அசுரர்களைத் துரத்த அல்லது அழிக்க உதவும்.

முனிவர்களுக்குத் தத்துவங்களை அருளி, அவற்றின் பொருளை உணர்த்துவது ஒரு திருக்கரம். இன்னொரு கரம் மார்பின் மாலையோடு சேர்ந்திருப்பது. இந்நிலையில் முருகன் சின்முத்திரை தரித்துக் குருவாக வீற்றிருக்கிறான்.

முருகன் ஞான பண்டிதன். அதனால் அவன் மோன குருவாக இருக்கிறான். மனமும் குணமும் சலனமும் ஆகிய அழுக்குக்கள் இல்லாத துரியமும் கடந்த துரியா தீதநிலையில் பெறும் ஆனந்த அநுபூதியைத் தருவதற்குக் காரணமான மௌனமான அட்சரம் ஏதும் இல்லாத மந்திரமாகிய முத்திரை பொருந்தியது ஒருகரம்.

மோனமுத்திரையே மௌன நிரட்சத மந்திரம். இதை உணர்ந்தவர்கள் துரியாதீதமாகிய சுகாநுபூதியில் திளைப்பார்கள். இந்த இரு கரங்களும் முருகப்பெருமானுடைய ஞானச் சிறப்பைத் தெளிவாகக் காட்டுகின்றன.

இன்னொருகையானது கீழே தழுவிவிழும் வளையோடு மேலே சுழன்று கனவேள்வி செய்யவென்று உத்தரவிடுகிறது.

மற்றொருகை இனிமையான ஓசை பொருந்திய மணியை மாறிமாறி அடிக்கிறது.

இன்னொரு கரமானது நீலநிற வானத்திலிருந்து பொழியும் மழையைப்போல அருளைப் பொழிகிறது.

மற்றொரு கரம் தேவலோக மங்கையற்கு மாலை சூட்டுகிறது. இவ்வாறு பன்னிரு திருக்கரங்களும் திருமுகங்களுக்கேற்றபடி அருட்செயல்களைச் செய்து அடியவர்களுக்கு அபயமளித்து அருள்சொரிகின்றன.

முருகன் மலையில் இருக்கிறான். சமவெளியில் இலங்குகிறான். காட்டில் ஒளிர்கிறான். நாட்டில் திகழ்கிறான். ஆற்றில் இருக்கிறான். குளத்தில் இருக்கிறான். மனிதர்கள் கூடுகின்ற இடத்தில் இருக்கிறான். மனித சஞ்சாரமே இல்லாத இடத்திலும் விளங்கு கிறான் என்று நக்கீரர் கூறுகிறார்.

முருகனின் அருளை வேண்டி மக்களும், தேவர்களும், முனிவர்களும், ரிஷிகளும் வணங்குகின்றனர்.

தேவமகளிர்கள், முருகன் பெருவிருப்புடன் குடிகொண்டிருக்கும் குறிஞ்சி நிலத்திற்கு வந்து தம்மை விதம்விதமாக அலங்கரித்து அவனை வணங்குகின்றனர். போர்க்களத்தில் இரத்தத்தைக் குடிக்கும் பயங்கரமான பேய்களும் முருகனை வாழ்த்தி வணங்குகின்றன. இந்திரனோடு தேவர் கூட்டமும் வந்து முருகனை வாழ்த்தித் தமது குறைகளைக் கூறிப் பரிகாரம் பெறுகின்றனர். கொலைத்தொழிலை அஞ்சாது செய்யும் வேடர்களும் முருகனாலயத்தில் கூடிநின்று கூத்தாடி வணங்குகிறார்கள். கற்றவர்களும், ஞானிகளும், கல்லாதவர்களும் முருகனை வணங்கி வரம்பெறுகிறார்கள். மும்மூர்த்திகளும் குறிஞ்சி நிலத்திற்கு வந்து குறிஞ்சிப் பண்ணைப்பாடி முருகனை வழிபடுகின்றனரென்று நக்கீரர் கூறுகிறார்.

முருகனது பன்னிரு விழிகளும் பரிவுடன் அடியவர்களை நோக்கி அவர்கள் படும் இன்னல்களைத் தீர்த்துவைக்கின்றன.

ஏறுமயிலேறி விளையாடும் முகத்தில் உள்ள விழிகள் குறும்புத் தன்மையானவை. இரக்கமும் பரிவும் பாசமும் மிக்கவை. அடியவர்களுக்கு வேண்டியவற்றை அருளுபவை.

ஈசனுடன் ஞானமொழி பேசும் முகத்தில் உள்ள விழிகள் ஞானிகளுக்கும், முனிவர்களுக்கும், ரிஷிகளுக்கும், தேவர்களுக்கும், ஞானத்தை அடைய விரும்பும் அடியவர்களுக்கும் ஞானத்தைத் கொடுப்பவை. சூரியனது கதிர்களைப் போல உண்மையை உணர்த்துபவை, மெய்ப்பொருளை உணர்த்தி ஞானத்தை வெளிப்படுத்திப் பிறப்பில்லாத நிலையை உண்டாக்குபவை.

கூறுமடியார்கள் வினை தீர்க்கும் முகத்தில் உள்ள விழிகள் அடியவர்களது குறைகளை அறிந்து, கருணைகூர்ந்து, அன்பு பெருக நோக்கி, குறைபடுவோரின் குறைகளை நீக்கி மெய்ப்பொருளை ஊட்டுபவை.

குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகத்தில் உள்ள விழிகள் அடியவர்களுக்கு அஞ்சவேண்டாம். துன்பம் வந்தால் என்னை நினை உனது துன்பம் யாவும் நீங்கிவிடும். உனக்கு என்ன தேவையோ அதைக் கேள். தர்மமானதென்றால் தருவேன் என்று கூறுபவை.

மாறுபடு சூரனை வதைத்த முகத்தில் உள்ள விழிகள் சிவந்தன. அருளும், சினமும் மிக்கன.

அடியவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்களையெல்லாம் நீக்கி அருளை வாரி வழங்குவன. துட்டதேவதைகள், பேய், பிசாசு, பூதங்கள், செய்வினை, சூனியம் என்பன அடியாரைக் கண்டவுடன் கிலிகொண்டு ஓட வைப்பன. துன்பங்களை நீக்கி இன்பம் தருவன. கொடுமைகளை அழித்து நிம்மதியைத் தருவன.

வள்ளியை மணம்புணர வந்த முகத்தில் உள்ள விழிகள் காதல் உணர்வு மிக்கவை. அடியார்களிடையே பிரச்சினைகள் அதாவது கணவன் மனைவியரிடையே பிரச்சினைகள் உருவானால் தீர்த்து வைப்பவை. குழந்தைச் செல்வத்தைக் கொடுப்பவை. குழம்பிய திருமணங்களைச் முடித்து வைப்பவை. முருகனுடன் வள்ளியையும் சேர்த்து வணங்கினால் காதல் சம்பந்தமாக வரும் பிரச்சினைகள் யாவும் தீரும். தலை சம்பந்தமான நோய்கள் விலகும். குறிப்பாக இளநரையுள்ளோர் வள்ளியை வணங்குதல் வேண்டும்.

சிவபெருமானின் சக்திகள் அனைத்தும் முருகனுக்கு உண்டென்று கந்தபுராணம் கூறுகிறது. முருகன், சிவபெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றியவர். அதனால் அவரது சக்தி முழுவதையும் பெற்றவரென்று கந்தபுராணம் கூறுகிறது. அதைப் பின் வரும் பாடல் உணர்த்துகிறது.

"அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்(கு) உதித்தனன் உலகம் உய்ய"

சிவனால் முருகனுக்கு வேல் கொடுக்கப்பட்டது. கொடுமைகள் புரிந்த சூரனை அழிப்பதற்காகவே முருகனுக்குச் சிவபெருமான் வேலைக்கொடுத்தார். வேy; சிவசக்தியாகும். சிவனது சக்தி திருவருள் என்று சிவஞானபோதமும் மெய்கண்டசாஸ்திர நூல்களும் கூறுகின்றன. சிவசக்தியைத் திருமந்திரம் திருவருளம்மை என்று விதந்து கூறுகிறது. சிவவலிமையுடன் சிவனின் நெற்றிக்கண்ணிலிருந்து உதித்த முருகப்பெருமானுக்கு மேலும் சக்தி கொடுப்பதற்காகவே

சிவபெருமானால் வேல் வழங்கப்பட்டது. அதனால் திருவருளுக்குள்ள சக்தி அனைத்தும் வேலுக்கும் உண்டு. வேலைத் தனித்து வழிபட்டால் அது முருகனையும் சிவனையும் உமையையும் வழிபட்டதற்குச் சமமாகும்.

சிவனது நெற்றிக் கண்ணில் அரைப்பகுதி உமைக்குரியது. அதனால் முருகன் சிவனும் உமையும் சேர்ந்த கண்ணில் இருந்து தோன்றியமையால் அவன் இருவரினதும் புத்திரன். அதனால் அவனுக்கு இருவரினதும் சக்தி உளது.

மயில் விநாயகருடைய வாகனம். முருகன் சூரனுடன் போரிடுமுன் விநாயகர் தனது சக்தியையும் தனது வாகனமான மயிலையும் கொடுத்து; “இம்மயில் இனி உனது வாகனமாகவும், எனது சக்தியாகவும் தொழிற்படும்” என்று கூறியதாக விநாயகபுராணம் கூறுகிறது.

அதனால் மயில் வாகனத்தில் வேலுடன் காட்சி தரும் முருகனை வணங்கினால் சிவனையும், பார்வதிதேவியையும், விநாயகரையும் வணங்கிய பயன் கிடைக்கும்.

இது தவிர மகாவிஷ்ணு பகவத்கீதையின் வீபூதியோகத்தில் உள்ள இருபத்து நான்காவது சுலோகத்தில்; “ஷேனானீனாமஹம் ஸ்கந்தக” என்று அருச்சுனனுக்குக் கூறுகிறார். இதன் கருத்து; “சேனைத் தலைவர்களுள் நான் முருகக்கடவுள்” என்பதாகும். இதன்படி மாறுபடு சூரனை வதைத்த முகம் மஹாவிஷ்ணுவுடையது.

முருகனுக்கு மாவிளக்கு என்னும் உணவே பிடிக்கும். அதனால் முருக பக்தர்கள் தேனும் தினைமாவையும் கலந்து விளக்குப் போல செய்து வாழைத்தண்டு, தாமரை நூல் கொண்ட திரியை பசு நெய்யிட்டுக் கொழுத்தி வழிபட்டுப் படைத்தால், படைப்பவர்களுக்குச் சகல ஐஸ்வரியங்களும், நீண்ட ஆயுளும் கிடைக்கும். பஞ்சுத்திரி அல்லது பட்டு நூல்திரியைப் பசு நெய்யில் ஏற்றினால் மங்களமும், இலட்சுமிகடாச்சமும் கிடைக்கும். விளக்கைக் கிழக்கு முகமாக ஏற்றுவது சிறப்பானது. மேற்கு நோக்கியும் வடக்கு நோக்கியும் ஏற்றலாம். தெற்கு நோக்கி ஏற்றினால் மரணபயம், நோய், நட்டம் என்பன உண்டாகும்.

குரு பகையானவர்கள், குழந்தைகள் இல்லாதோர், குருவால் பாதிக்கப்பட்டோர், குருவின் ஸ்தலமான முருகன் கோயிலுக்குச் சென்று நெய்விளக்கேற்றி வழிபடுதல் வேண்டும்.

சுக்கிரதிசை நடப்பவர்களும், சுக்கிரன் நீசம் பெற்றவர்களும், இளவயதில் சுக்கிர திசை நடப்பவர்களும் முருகன் கோயிலுக்குச் சென்று வள்ளி திருமணத்தைப் பாராயணம் செய்து மாவிளக்குச் செய்து பசுநெய்விட்டு எரித்துப் படைத்தால் குற்றங்கள் குறைகள் யாவும் நீங்கும்.

சனி திசை நடக்கும் போதும், ஏழரைச்சனி, அட்டமத்துச்சனி நடக்கும் போதும் சனிபகவானை வணங்கவேண்டும். அத்துடன் வள்ளி தெய்வயானையுடன் வேல் தாங்கி மயில் வாகனத்தில் இருக்கும் முருகனை வணங்குதல் சிறப்பானது. இக்காலத்தில் திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தசஷ்டிக்கவசம் என்பவற்றை ஓதி வந்தால் சனியின் பார்வை குறைவடையும்.

இவ்வாறு நோக்கின் முருகன் காத்தல் தொழிலைச் செய்யும் மஹாவிஷ்ணுவாகப் பகவத்கீதையில் உருவகிக்கப்படுகிறான். இதுவரை நாம் சிவன், விநாயகர், உமை ஆகியோரின் சக்திகள் படைத்தனவாகவே முருகனைக் கருதினோம். இதன் பின் மஹாவிஷ்ணுவின் சக்தியும் உடையவனாக முருகன் விளங்குவதைக் காண்கின்றோம்.

படையினது வெற்றி சேனாதிபதியின் திறமையைப் பொறுத்ததாகும். பொருத்தமான வேளையிற் செய்யும் செயல் வல்லமை அல்லது திறமை எனப்படும். சிவகுமாரர்களுள் விநாயகர் அறிவின் இலக்கணம். முருகன் ஆற்றலின் வடிவம். கந்தன் என்ற சொல் துள்ளிக்குதிப்பவன் எனப்பொருள்படும். இந்த வகையில் ஆற்றல் என்ற வல்லமைக்குக் கந்தன் உருத்துடையவனாக மஹாவிஷ்ணுவால் கூறப்படுகிறான். அதனால் கந்தனிடம் அனைத்து ஆற்றல்களும் அடங்கியுள்ளமையை நாம் உணர்ந்து கொள்ளலாம். அதனால் முருகனைத் தொழுவோர் உலகிலுள்ள அனைத்து ஆற்றல்களையும் பெறுவர். ஆற்றலுடையவனுக்குத் தான் பூமி சொந்தமானது. ஆற்றல் நினைத்தவற்றையெல்லாம் கொடுக்கும். அதனால் முருகனை வணங்கி ஆற்றல்களைப் பெறுங்கள்.

முருகனைத் தனித்து வணங்க முடியாது. சில பால முருகனின் சித்திரங்கள் வேலில்லாது காணப்படுகின்றன. வேலில்லாது காணப்படும் முருகன் கிருஷ்ணனை நினைவுறுத்தினாலும், கிருஷ்ணன் சேனாதிபதியாகக் கந்தபுராணத்தில் உருவெடுத்தவனென அறிந்தோம். அதனால் வேலில்லாத முருகனைக் கண்டு வணங்கினால் அது கிருஸ்ணரைக் கண்டு வணங்கி வரம் பெற்றமைக்குச் சமனாகும். வேலில்லாத பாலமுருகனது அருள் இரட்டிப்பானது. முருகனினதும் கிருஷ்ணனினதும் அருள் ஒன்றாகக் கிடைக்கும்.

தனியே வேலை வணங்கினால் சிவனுடன் சக்தியையும் முருகனையும் வணங்கிய பலன் கிடைக்கும். முருகனின் பெற்றோர்களான சிவனும் உமையும் முருகனுடன் சேர்ந்து வரமளிப்பார்கள்.

மயில் வாகனத்தில் வேல் வைத்திருக்கின்ற முருகனை வணங்கினால் சோமஸ்கந்தரை வணங்கிய பயன்கிடைக்கும். வேல் சிவனும் சக்தியும், மயில் விநாயகன். எனவே பெற்றோரான சிவனும் பார்வதியுடனும் விநாயகனும் முருகனும் வீற்றிருக்கும் கோலத்தைக் காண்பதோடு, அவர்கள் அனைவரையும் வணங்கிய பலன் ஒருநேரத்தில் கிடைக்கும்.

வேலுடன் வள்ளி தெய்வயானையும் மயிலும் உள்ள உருவை வணங்குவோர் சகல ஐஸ்வரியங்களையும் பெறுவர். வேல் மயிலில் வள்ளி தெய்வயானையுடன் உலாவருவதோ, அதை வணங்குவதோ கூடாதெனச் சிலர் வாதிடலாம். அது தவறு. சிவனின் குடும்பம் பவனிவருவதென்றே அதைக் கருதுதல் வேண்டும். தேவர்கள் செய்த யாகங்களுக்கும், கிரியைகளுக்கும் சிவனது குடும்பம் சென்றுள்ளதை நாம் புராண இதிகாசங்களிற் காண்கிறோம். சிவனின் குடும்ப அங்கத்தவர்களில் ஒருவர் இல்லாவிட்டாலும் அது பெருங்குறையுள்ளதாகத் தோன்றிப் பல அழிவுகளுக்கு இடங்கொடுத்ததாகப் புராணங்களும் இதிகாசங்களும் கூறுவதையும் நாம் அறிவோம்.

இந்து மதங்களை ஆறாக வகுத்தவர் சங்கரர். இந்த ஆறு மதங்களையும் சண்மதங்கள் என்று அறிஞர் கூறுவர். சண்முகன் என்பது முருகனது நாமம். இந்தச் சண்முகம் ஆறு கடவுள்களின் செயற்கை என்று முன்பு

அறிந்து கொண்டோம். அதைக்கொண்டு சண்மதங்களின் தலைவன் சண்முகன் என்று துணிந்து சொல்லலாம்.

வேல் முருகனது படைக்கலன் அல்ல. அது சிவசக்தி. சிவசக்தி என்பது திருவருள் என்று சிவஞானபோதமும் திருவருட்பயனும் கூறுகின்றன. இதை மெய்கண்டசாஸ்த்திர நூல்கள் உறுதி செய்கின்றன.

திருமந்திரமும் திருவாசகமும் சிவசக்தியான திருவருளைப் பற்றி விதந்து கூறியுள்ளன. வினைகளை அறுப்பது சிவசக்தியான திருவருள். அநியாயங்களை, அக்கிரமங்களை அழித்து உயிர்களுக்கு விடுதலை அளிப்பது திருவருள். அந்தத் திருவருளைத் தான் சிவபெருமான் வேல் என்ற படைக்கலமாக்கி முருகனுக்குக் கொடுத்தார். அதனால் தான் சூரனை அழிக்க முடிந்தது. அரக்கத்தனம் கொண்ட ஆணவம் தான் வினை. அதை அழிப்பதை நோக்கமாகக்கொண்டது தான் சூரசங்காரம்.

சங்காரம் செய்யும் கடவுளிடம் தான் உயிர்களும் உலகமும் ஒடுங்குகின்றன. பின் அச்சங்காரக் கடவுள்தான் உலகையும் உயிர்களையும் தோற்றிவிக்கிறாரென்று சிவஞானபோதம் கூறுகின்றது. இதன்படி நோக்கினால் சிவபெருமானின் சக்தியாகிய திருவருள் என்ற வேலே சூரனைச் சங்காரஞ் செய்தது. சங்காரகர்த்தா ஒருவர். அவர் சிவன் என்று சைவசித்தாந்தம் கூறுகிறது. இந்துமதம் என்று எதுவும் இல்லை. இந்தியாவில் உள்ள மதங்களை இந்திய மதங்கள் என்று இந்தியாவைக் கைப்பற்றியாண்ட பிறதேசத்தவர்கள் கூறியதை இங்குள்ளவர்களும் கூறிகிறார்களே தவிர இந்து மதம் என்று எதுவும் இல்லை. இந்தியாவில் உள்ள சமயம் சைவசமயம். இந்தியாவில் வணங்கப்படும் தெய்வங்கள் யாவும் சைவசமயத்திற்குரியன.

அதனால் வேலை மயிலுடனும் வள்ளி தெய்வயானையுடனும் வணங்கினால் அது சிவனின் குடும்பத்தை வணங்குவதையே குறிக்கும். மஹாவிஷ்ணு பகவத்கீதையில் வீபூதியோகத்தில் இருபதாவது சுலோகத்தில் “ஜ்யோதிஷாம் ரவிரம் சுமான்” என்றும், இருபத்திநான்காவது சுலோகத்தில்; “ஸேனானீனா மஹம் ஸ்கந்தக” என்றும், இருபத்தாறாவது சுலோகத்தில்; “ஸித்தானாம் கபிலோமுனி” என்றும் கூறுகிறார்.

அதன் அர்த்தம் ஒளிர்பவற்றுள் நான் சூரியன். சேனாதிபதிகளுள் நான் கந்தன். சித்தர்களுள் நான் கபில முனி என்பதாகும். இதன் படி பார்த்தால் சாத்தமதத்தாப கரான கபில முனிவர் மஹாவிஷ்ணுவின் அவதாரம்.

இதைவிடச்சக்தியைச் சிவனில் இருந்து பிரித்துக் காணமுடியாது. இதனால் சக்தியுள்ள இடங்களிலெல்லாம் சிவனும் இருப்பார். இப்படிப் பார்க்கும் போது எல்லாத் தெய்வங்களும் ஒன்று என்ற நிலை தோன்றும்.

அந்த ஒரு தெய்வம் சிவன் என்கிறது சைவசித்தாந்தம். அதற்குக் காரணம் சிவக்குடும்பத்தின் தலைவர் சிவபெருமான். ஒவ்வொரு தெய்வத்தையும் தனித்தனி வணங்குவது மிகவும் சிரமமானது. அதனால் ஆறு தெய்வங்களையும் உள்ளடக்கிய சண்முகக் கடவுளான முருகனை வணங்கினால் ஆறு தெய்வங்களையும் வணங்கிய பலன் கிடைக்கும்.

முருகனின் படை வீடுகள் ஆறு. அவை திருப்பெருங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்று தோறாடல், பழமுதிர்ச்சோலை.

முருக நாம அர்ச்சனை ஆறு எழுத்துக்களையுடைய "சரவணபவ" என்பதாகும். "ஆறுமுகம், ஆறுபடை வீடு, ஆறெழுத்து மந்திரம், ஆறு சமயங்கள், ஆறு தெய்வங்கள் யாவும் முருகனுக்குரியவை. இவற்றை முருகனின் ஆறு முகங்களாகக் கொள்ளலாம்.

எதையும் மிகவும் எளிமையாகவும், எல்லோருக்கும் விளங்கும்படியாகவும் கூறுவது எனது இயல்பு. இதற்காகத் தத்துவங்களையெல்லாம் சிறுசிறு கதைகளாக்கிக்கூற எல்லாம் வல்ல நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி என்கு அருள் செய்துள்ளார். இந்து தத்துவங்களை எழுத வாசிக்கத் தெரிந்த அனைவரும் உணர்ந்து கொள்ளல் வேண்டும் என்பதற்காகவே நான் எழுதுகிறேன்.

எதையும் பொருள் விளங்கிக் கற்றால் தான் அதனால் பிரயோசனம் உண்டாகும். ஒரு மாணவன் வாய்ப்பாட்டைப் பாடமாக்குகிறான். இரண்டாம் வாய்ப்பாட்டில் இருந்து பன்னிரண்டாம் வாய்ப்பாடுவரை ஒழுங்கு முறையாகச் சொல்வான். ஆனால் இடையில் கேட்டால் சொல்லமாட்டான். மாற்றிக்கேட்டாலும் சொல்லமாட்டான். இது பொருள்

விளங்காது கற்றதன் பயன். அதற்காகத் தான் சமயத்துவங்களின் பொருளைக் கதைகளாக எழுதி வருகிறேன். அந்த வகையில் ஆறுமுகமான பொருளின் தத்துவங்களைக் கதை மூலம் கூறுகிறேன்.

## ②

**க**திரேசன் பெரும் முருகபக்தர். கிராமத்திலுள்ள பெரிய முருகன் கோயிலில் எப்போதும் அவரைக் காணலாம். அவருக்கு பாலமுருகன், ஞானமுருகன், அருள்முருகன், வேல்முருகன், சங்கரமுருகன், மோகனமுருகன் என ஆறு ஆண்பிள்ளைகள் இருந்தனர்.

மூத்த மகன் பெரும் வர்த்தகன். இரண்டாவது மகன் வைத்திய நிபுணன். மூன்றாவது மகன் ஆசிரியன், நான்காவது மகன் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பிரிவில் படித்துக்கொண்டிருக்கிறான். ஐந்தாவது மகன் க.பொ.த உயர்தரப் பிரிவில் விஞ்ஞான பாடம் கற்றுக்கொண்டிருக்கிறான். ஆறாவது மகன் ஒன்பதாம் வகுப்பில் கல்வி கற்கிறான்.

கதிரேசனது மனைவி மகாலட்சுமி. பெயருக்கெற்றவாறு நடப்பவள். கணவன் மீதும் பிள்ளைகள் மீதும், இனத்தவர்கள், உறவினர்கள் மீதும் அளவற்ற அன்புள்ளவள்.

கதிரேசனுக்கு ஏராளமான நிலம் இருக்கிறது. அவர் வணங்கும் கந்தசுவாமி கோயிலுக்கும் ஏராளமான நிலம் இருக்கிறது. அவர் கல்யாணமான வருடமே மகாலட்சுமி கர்ப்பமாகினாள். அதனால் அவருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. தனது மனைவி கர்ப்பவதியானதை அறிந்ததும் தான் வணங்கும் கந்தசுவாமி கோயிலுக்கு வந்தார். அவரால் மகிழ்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அந்த மகிழ்ச்சியைக் கொண்டாடக் கந்தசுவாமியாருக்குத் தேனும், தினைமாவும், பசுநெய்யும், கரும்பும், கற்கண்டும் கலந்து மாவிளக்கேற்றினார். கோயிலுக்கு வந்திருந்த அடியவர்கள் எல்லோருக்கும் பொங்கலும் பழமும் மாவிளக்கும் கொடுத்தார்.

அன்றிரவு முருகன் அவரது கனவில் தோன்றினான்; “கதிரேசா உனது அன்பை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. எனக்குத் தினமும் நீ தான் பழங்களும் பாலும் தருதல் வேண்டும். அதற்காக நீ உனக்குப் பிள்ளைகள் பிறக்கும் போது அவர்களது நினைவாக கோயில் நிலத்தில் பயன்தரு மரங்கள் நடு. அதிலிருந்து தான் எனக்குப் பூசைப் பொருட்களை எடுத்தல் வேண்டும்” என்றார்.

கதிரேசன் அதிர்ந்து போனான். தன்னில் உள்ள அளவற்ற அன்பு காரணமாகவே முருகன் கனவில் வந்து கூறினான் என நினைத்து அன்றே மா, பலா, தென்னை, மாதுளை, வாழை போன்ற மரங்கள் ஒவ்வொன்றைக் கோயிற் காணிகளில் நட்டார். அதுபோல தனது வீட்டிலும் நட்டார்.

அதன் பின் தனது மனைவி கர்ப்பமாக இருக்கிறாள் என்பதை அறிந்தவுடனும், பிள்ளைகள் ஒவ்வொன்றும் பிறக்கும் போதும் மரங்கள் நட்டு வந்தார்.

இப்போது அது பெருந்தோப்பாக உள்ளது. தினமும் பூசைகளுக்கு வேண்டிய பூக்கள், இலைகள், இளநீர், தேங்காய், பழவகைகள் எடுப்பதோடு தேவைக்கதிகமானவற்றை ஏனைய கோயில்களுக்குக் குறைந்த விலையில் கொடுத்து வருகிறார்.

கதிரேசன் தினமும் அதிகாலை நான்கு மணிக்கு நித்திரைவிட்டெழுந்து காலைக்கடன்களை முடித்துவிட்டுக் குளிப்பார். பின் பூக்கூடையை எடுத்துக்கொண்டு கோயிலுக்கு வந்து கோயிலைக் கூட்டித் துப்பரவு செய்துவிட்டுக் கைகால் முகம் கழுவிய பின் பூக்கூடையை எடுத்துக்கொண்டு நந்தவனத்திற்குச் செல்வார்.

அங்குள்ள பூக்களைப் பறித்துக்கொண்டு கோயிலுக்கு வரும்போது அவரது மனைவி மகாலட்சுமியும் மகன்களான சங்கரமுருகனும், மோகனமுருகனும் கோயிலில் இருப்பார்கள்.

பிள்ளைகள் விளக்குகளுக்கு நெய்ஊற்றி திரியிட்டுக் கொழுத்துவார்கள். மகாலட்சுமி மாலை கட்டுவாள். அப்போது ஊரவர்கள் பலர் வந்து திருத்தொண்டுகள் செய்யத் தொடங்குவார்கள். இது தினமும் தவறாது நடைபெறும் நிகழ்வு.

அன்று நித்திரை விட்டெழுந்த கதிரேசன் காலைக்கடன்களை முடித்துவிட்டுக் குளித்தார். பின்பு பூக்கூடையை எடுத்துக்கொண்டு கோயிலுக்கு வந்தார்.

கோயில் மரங்களில் ஏராளமான பறவைகள் வாழ்கின்றன. தினமும் கதிரேசன் கோயிலுக்கு வந்ததும் அவை கலகலக்கும். அதைவிடக் கோயில் மயில்களுக்கென அவர் வரும்போது தானியங்கள் கொண்டு வருவார். மயில்கள் தானியங்களுக்காக வாசலில் காத்து நிற்கும். இன்று அவற்றையும் காணவில்லை. அதைவிட அதிகாலை நான்கு மணிக்குக் கோயிலின் உள்மண்டபத்துள் ஒரு மின்குமிழ் ஒளிரும். இன்று அந்த மின்குமிழ் ஒளிரவில்லை.

தான் நேரம் தவறி வந்துவிட்டோனோ என உணர்ந்த கதிரேசன், வெளிமண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த மணிக்கூட்டைப் பார்த்தார். அது பன்னிரண்டு மணி பத்து நிமிடத்தைக் காட்டியது.

கதிரேசனுக்குச் சிரிப்பு வந்தது. முருகன் அவரைத் தனது தந்தையென்றும், தான் உனது மகனென்றும் கனவில் கூறுவதுண்டு. எல்லாம் அவன் செயலென்று நினைத்தவாறு திருப்பரங்குன்றில் வாழும் முருகனை நினைத்துத் திருப்புகழைப் பாடிக்கொண்டு வெளிமண்டபத்துள்ப் படுத்தார்.

“முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக் கிறை சத்திச் சரவண
முத்திக் கொரு வித்துக்குருபர எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவருள்
முப்பத்துமு வர்க்கத் தமரரு மடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணை தொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியி விரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப் புயல் மெச்சத் தகு பொருள்
பட்சத்தொடு சட்ஷித் தருள்வது மொருநாளே
தித்தித் தெய வொத்தப் பரிபுர
நிமிர்த்தப் பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்கந டிக்கக் கழுகொடு கழுதாடத் “

“கதிரேசப்பூ... கதிரேசப்பூ...” சிறு குழந்தையொன்று அழைக்கும் குரல் கதிரேசனுக்குக் கேட்டது. அவர் குரல் வந்த திசையைப் பார்த்தார். அங்கே பாலமுருகன் வேலுடன் நின்றான்.

“முருகா ..., பாலமுருகா;. சண்முகா.. அதற்காகத்தானா என்னை நீ நடுச்சாமத்தில் எழுப்பிக்கூட்டிவந்தாய்;?”

“ஓம் கதிரேசப்பூ... நீ என்னை மட்டும் தான் வணங்கவேண்டும். எனக்குத்தான் முதலில் விளக்கேற்றல் வேண்டும். எனக்குத்தான் முதலில் நிவேதனம் வைத்தல் வேண்டும்”

“பிரணவப்பொருளை தந்தைக்கு உபதேசித்த நீ இப்படிச் சொல்லலாமா..? சைவசமயத்தில் முதல் பூசைக்குரியவர் பிள்ளையார் என்று உனது தந்தையே கூறியிருக்கிறார்..” கதிரேசன் தளதளத்தார்.

“அவர் மற்றவர்களுக்குத் தான் கூறியவர். உங்களுக்கல்ல. அதைவிட நீங்கள் என்னை மட்டும் தான் வணங்கவேண்டும்” என்றான் முருகன்.

“முருகா விதியை மாற்றாதே. நீ சூரனோடு போரிட்ட போது விநாயகரிடம் ஏன் ஆசி பெற்றாய்.. அதைவிட நீ வள்ளியைத் திருமணம் செய்யச் சென்ற போது விநாயகரை வணங்காது சென்றதால் பெருந் துன்பப்பட்டாய். உனது காரியம் நிறைவேறவில்லை. பின்பு உனது தந்தையாரின் சொற்படி விநாயகரை வணங்கினாய். அதன் பின்பு தான் திருமணம் நடைபெற்றது. இவற்றையெல்லாம் மறந்துவிட்டாயா..? அல்லது எனக்கு விநாயகரால் துன்பத்தை உண்டாக்கப் போகிறாயா..?” அழுதார் கதிரேசன்.

“நான் உங்களைத் துன்பப்படவிடமாட்டேன். சூரனை அழித்தது போல உங்களுக்கு வரும் துன்பங்களையும் அழிப்பேன்” என்றான் முருகன்.

கலங்கிப்போனார் கதிரேசன்; “முதற்பூசை விநாயகருக்குத்தான் உலகெங்கும் நடைபெறுகின்றது. அதை எப்படி மாற்றுவது. முருகன் வந்து தனக்குத்தான் முதற்பூசை செய்யவேண்டும் என்று கூறினான் என்று சொன்னால் யார்

நம்புவார்கள்..? எனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்று கூறுவார்கள்''.

''என்ன கதிரேசப்பூ யோசிக்கிறீர்கள். நாளைக்கு எனக்குத் தான் முதற்பூசை செய்யவேண்டும்" முருகன் சிரித்தான்.

"முருகா என்னைச் சோதிக்காதே.. எனக்குப் பயமாக இருக்கிறது. நீ சொல்வதைச் செய்யாவிட்டாலும் பயம். செய்தாலும் பயம்.. என்னை என்ன செய்யச் சொல்கிறாய்..?" அழுதார் கதிரேசன்.

"கதிரேசப்பூ, எனக்கு முதல்பூசை செய்;" அப்பொழுது கதிரேசன் எதையோ சொல்ல நினைத்தார். ஆனால் அவரைப் பேச முருகன் விடவில்லை; "கதிரேசப்பூ, நான் எனக்கு இனியவர்களைத் தான் சோதிப்பேன். அவர்களுடன் விளையாடுவேன். அதனால் நீங்கள் எனக்குத்தான் நாளையிலிருந்து முதற்பூசை செய்தல் வேண்டும்"

"செய்கிறேனப்பா; செய்கிறேன். வழமையாக அடியவர்கள் தான் ஆசையாலும் அவாவாலும் தமக்கு சேராதவை எல்லாவற்றையும் சேரும்படி கேட்பார்கள். இப்போ நீயும் அடியார்கள் போல கேட்கக்கூடாததையெல்லாம் கேட்கிறாய். நீ என் மீது அன்புள்ளவன். அதனால் நான் கேட்டதையும் நீ செய்யவேண்டும்" என்றார் கதிரேசன்.

"நீங்கள் என்னை எதுவும் கேட்பதில்லை. இப்போது கேட்கப்போகிறேன் என்கிறீர்கள் உடனே கேளுங்கள்" என்றான் முருகன்.

"பெற்றோர் பிள்ளை கேட்பதைக் கொடுக்கிறார்கள். பிள்ளைகளின் தேவை என்னவென்று பெற்றோருக்குத் தெரியும். அதனால் பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காக அவர்களது மனத்தை அறிந்து செயற்படுகிறார்கள். எனது தாயும் தந்தையும் நீ. அதனால் நான் நினைக்காதவற்றையெல்லாம் அள்ளிக் கொடுக்கிறாய். எனக்குத் தேவையென எதையும் நீ வைக்கவில்லை. அதனால் தான் நான் கேட்கவில்லை. இப்பொழுது தேவை வந்துள்ளது. கேட்கிறேன் தா" என்றார் கதிரேசன்.

"இன்று நான் பெரும் மகிழச்சியடைகிறேன். எனது அடியவன் ஒருவன் முதல் முதலாக கேட்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது" என்றான் முருகன்.

"முருகா, காசிய முனிவரின் மனைவியான வினதை, தனது பிள்ளைகளை நாகர்கள் சிறைப்பிடித்துச் சென்றுவிட்டனர் என்றும் அவர்களை மீட்டுத்தரவேண்டும் என்றும் விநாயகரை வேண்டினாள். அதற்கு விநாயகர்; "உனது வயிற்றில் முட்டை ஒன்று உருவாகும். அதை ஈன்ற பின் அதை என்னிடம் கொண்டுவா" என்றார்.

"அதன்படி முட்டையொன்றை ஈன்ற வினதை, அதை விநாயகரிடம் கொண்டு சென்றாள். விநாயகர் அம்முட்டையை உடைத்தார். அதிலிருந்து ஒரு மயில் வெளிப்பட்டது. அந்த மயிலில் சென்ற விநாயகர்நாகர்களை அழித்து வினதையின் புத்திரர்களைக் காப்பாற்றினார். பின் நீ சூரனுடன் போர் செய்யச் செல்லும் போது தனது வாகனமாகிய மயிலை உனக்குத் தந்ததோடு தனது சக்திகளையும் உனக்குத் தந்தார்"

கதிரேசன் பேசிக்கொண்டிருக்கும் போது முருகன் குறுக்கிட்டான்; "இதெல்லாம் எனக்குத்தெரியும். இதை ஏன் இப்போது சொல்கிறீர்கள். வேண்டியதைக் கேளுங்கள் தருகிறேன். ஆனால் நாளையிலிருந்து எனக்கே முதற்பூசை செய்யுங்கள்" சிரித்தான் முருகன்.

''முருகா நீ எப்போதும் அவசரப்படுபவன். நாரதர் தந்த மாங்கனிக்கும் அவசரப்பட்டாய்..." பலமாகச் சிரித்தான் முருகன். பின் வந்து கதிரேசனது மடியில் உட்கார்ந்துகொண்டு.. "கதிரேசப்பா, கேளுங்கோ" என்றான்.

கதிரேசன் உருகிப்போனார்; "அப்பனே, ஞானப்பழம் நீ, ஞானகுருவும் நீ, நீ அறியாதது எது உள்ளது. விநாயகரின் அனுக்கிரகமும், சக்தியும் பெற்றவன் நீ. மயிலை வணங்கினால் பிள்ளையாரை வணங்கியமைக்குச் சமம். அதனால் உனது ஆறுதிருமுகங்களுள் ஒன்றாக நான் விநாயகரைக் கருதுகிறேன். நாளை முதல் நீ தும்பிக்கையுடன் இரு முதலில் பூசை செய்கிறேன்" என்றார் கதிரேசன். பலமாகச் சிரித்தான் முருகன்.

‘‘திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகு தொகு
சித்ரப் பவுரிக்குத் திரிகடக எனவோதக்
கொத்துப் பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றொரு நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே’’
வாய் புலம்பினார் கதிரேசன்.

“கதிரேசப்பா.. இராத்திரி கோயிலிலா படுத்தீர்கள்..?” என்றவாறு கதிரேசனைத் தட்டி எழுப்பினான் கெங்காதரனின் மகன் பாலசரவணன்.

திக்கிட்று எழுந்த கதிரேசன் சில கணங்கள் தடுமாறினார்.

“அப்பூ, இன்று பரீட்சை. சுவாமி தரிசனம் செய்ய வந்தேன். நான்கு மணிக்குக் கோயிலைத் துப்பரவு செய்யும் நீங்கள் இன்று ஐந்து மணியாகியும் எழும்பவில்லை” என்று கூறிவிட்டுச் சென்றான்.

கதிரேசன் அவசர அவசரமாகச் சென்று கோயிற் கிணற்றில் நீரை அள்ளி முகம் கைகால் கழுவிவிட்டுப் பூப்பறிக்கச் சென்றார்.

பூக்களுடன் வந்த கதிரேசனைப் பார்த்து கோயிலில் நின்றோர் சிரித்தனர். குருக்கள் கேட்டார்; “கதிரேசு, முகத்தில் யாரோ எண்ணெய்க் கரியால் மீசை வைத்திருக்கிறார்கள்” என்றார்.

‘‘கெங்காதரனின் மகனுக்குப் பரீட்சையாம். அவன் தான் என்னை எழுப்பினவன். அவன் சற்றுக் குழப்படி, குறும்புக்காரன். அவன் தான் வைத்திருப்பான்” என்றார் கதிரேசன்.

“அவன் பெருங்குழப்படி. கோயிலுக்கு வந்தால் அவனைக் கவனிக்க ஒராள் வேண்டும். வாகனங்களில் ஏறுவான், விளக்கை அணைப்பான், ஓடி விளையாடுவான். கெங்காரன் ஒரு பிள்ளையென்று கடுஞ்செல்லம் கொடுத்து

வளர்த்து வருகிறார். அது அவருக்கு மட்டுமல்ல கிராமத்திற்கும் கேடு” என்றார் குருக்கள்.

“அதுதானே. வயது வித்தியாசம் பாராது விளையாடுகிறான்” மகாலட்சுமிக்கு அவரைப் பார்க்கக் கவலையாக இருந்தது. விக்கி விக்கி அழுதாள்.

“கதிரேசண்ணையை மீசையோடு பார்க்க மிகவும் அழகாக இருக்கிறது” என்றான் கந்தவனம்.

அப்பொழுது கெங்காதரன் வந்தான்; “கெங்கா, உன்னுடைய மகன் செய்த வேலையைப்பார். வயது வித்தியாசமில்லாது உனது மகன் கதிரேசுவுக்கு மீசை வைத்துள்ளான். சிறுபிள்ளைகள் குறும்புத்தனமாக நடப்பது குற்றமல்ல. வயது வித்தியாசம் பாராது விளையாடுவது மகாதவறு” என்றார் குருக்கள்.

“ஐயா, நீங்கள் கூறுவது போல எனது மகன் குறும்பன் தான். ஆனால் அவன் மூன்று நாட்களுக்கு முன்பு எனது தாயாரின் வீட்டுக்குச் சென்றுவிட்டான். இன்னும் மூன்று தினங்களின் பின்பு தான் வருவான்” என்றான் கெங்காதரன்.

“கதிரேசனுக்கு மயக்கம் வருவது போல இருந்தது. மனக்கண்ணில் பாலசரவணன் தன்னை எழுப்பிய காட்சி தெரிந்தது... “முருகா, எல்லாம் உன்னுடைய திருவிளையாடல் தான்” என்று மனதில் எண்ணினார் கதிரேசன்.

“கதிரேசனை நடுச்சாமத்தில் எழுப்பி வந்து பாலமுருகன் விளையாடியிருக்கிறான்” என்றார் குருக்கள்.

## 3

**க**திரேசன் பழமுதிர்ச்சோலைக்கு வந்தார். அப்போது மணி ஒன்று. கந்தசுவாமி கோயிலுக்கு அருகே இருந்த கோயிற் காணியை அடைத்துப் பலவகையான பழமரங்களையும் பூமரங்களையும் நட்டிருந்தார் கதிரேசன். மரங்கள் யாவும் செழித்து வளர்ந்திருந்தன. எல்லைவேலியைச் சுற்றி நூற்றுக்கணக்கான தென்னை மரங்களும் கமுக மரங்களும் நடப்பட்டிருந்தன. காணியின் நடுவில் ஒரு

தடாகம் அமைத்து அதில் நீர்ப்பூக்கள் அனைத்தையும் நட்டிருந்தார். பூந்தோட்டத்தில் பல்வேறு வகையான பூங்கன்றுகள் நின்றன. ரோஜா வகையில் பலவகை நின்றன. ஒரு நாள் அருள்முருகன் அந்தக் காணிக்கு ஆசிரியர் சிலருடனும் மாணவர்கள் பலருடனும் வந்தான். அப்போது அங்கு வந்த ஆசிரியர் அப்பெரு நிலப்பரப்பைச் சுற்றிப் பார்த்துவிட்டு; ‘‘அப்பா, இந்த நிலத்தைப் பார்க்கும் போது எனக்கு முருகனின் ஞாபகம் வருகிறது. இப்படியான இடத்தை நான் இதுவரை பார்வையிடவில்லை. எவ்வளவு மரங்கள் பழங்களைச் சுமந்து நிற்கின்றன. எத்தனை வகையான தென்னைகள் நிற்கின்றன. எத்தனை வகையான பூக்கள் மலர்ந்துள்ளன. இங்கில்லாதது எதுவும் இல்லை. இந்த முருகன் கொடுத்து வைத்தவன். அதனால் இந்த நிலத்தைப் “பழமுதிர்ச்சோலை” என்று அழைக்கலாம்” என்றான். அதனால் அந்த நிலத்திற்குப் பழமுதிர்ச்சோலை என்று கதிரேசன் நாமம் சூட்டினார். அப்படியே கிராம மக்களும் அழைத்தனர். காலப்போக்கில் அவ்வாலயத்தையும் “பழமுதிர்ச்சோலை” என்று மக்கள் அழைக்கத் தொடங்கினர்.

அங்கு வாழ்கின்ற பறவைகள் யாவும் கதிரேசனைக் கண்டதும் வந்து வேப்பமரத்தின் மேல் இருக்கும். வேப்பமரத்தின் அடியில் ஒரு சிறு மண்டபத்தைக் கதிரேசன் கட்டியிருந்தார். அம்மண்டபத்துள் அந்நிலத்தில் வேலை செய்வதற்குரிய ஆயுதங்களும் பறவைகளுக்குப் போடுவதற்காகச் சிறு தானியங்களும் இருக்கும்.

அன்று அவர் வந்ததும் ஓர் அணில் வந்து கீச்சிட்டது. அவர் அதைப் பார்த்தார். அது வாலை உயர்த்தியவாறு கீச்சிட்டுக் கீச்சிட்டு அருகில் இருந்த மாமரத்தில் தாவியிருந்து கீச்சிட்டது.

“முருகா என்னைக் கேட்டா நீ பழம் சாப்பிடவேண்டும். கத்தாமற் போய்ச்சாப்பிடு” என்றார்.

அணில் மரத்தினால் கீழே இறங்கி அவருக்கு அருகில் வந்து கத்தியது. பின் மாமரத்தில் ஏறியது.

“என்ன சொல்ல நினைக்கிறாய்” என்றவாறு எழுந்த கதிரேசன் மாமரத்தின் அருகே சென்றார். அந்த அணில் மாமரத்தின் உச்சிக் கொப்புக்குச் சென்று நன்கு கனிந்திருந்த ஒரு மாங்கனியை அறுத்து விழுத்தியது.

“கதிரேசன் எடுத்துப் பார்த்தார். தானாகக் கனிந்த கனி. அதன் வாசம் மூக்கைத் துளைத்தது; “எனக்காகப் பறித்தாயா? நான் அருள்முருகனுக்குப் படைத்துவிட்டு உண்கிறேன்” என்றவர் மண்டபத்தைத் திறந்து கத்தி ஒன்றை எடுத்து வந்தார். பின் பழத்தை நன்றாகக் கழுவிவிட்டு அறுத்து வேப்பமரத்தின் அடியில் வைத்துவிட்டுக் கற்பூரம் கொழுத்திவிட்டு முருக அர்ச்சனை செய்தார். அப்போது சேனாதிராஜா அங்கே வந்தான். அவனைப் பார்த்துச் சிரித்த கதிரேசன்; “நீயும் சொல்” என்றார்.

“ஓம் அகத்தியருக்கு அருளினோய் போற்றி
ஓம் அமரரைக் காத்தாய் போற்றி
ஓம் அருணகிரிக்கு அருள்வோய் போற்றி
ஓம் அழகர் மலையோய் போற்றி
ஓம் ஆறுமுகன் ஆனவனே போற்றி
ஓம் ஆண்டிக் கோலமே போற்றி
ஓம் ஆறுபடை வீடுடையாய் போற்றி
ஓம் ஆறெழுத்து மந்திரம் போற்றி
ஓம் இடும்பனை ஏற்றாய் போற்றி
ஓம் இளங்குமர ஏந்தலே போற்றி
ஓம் உலகை வலம் வந்தாய் போற்றி
ஓம் உருகும் அடியார் உளமே போற்றி
ஓம் எட்டிக்குடி அழகா போற்றி
ஓம் எண் கண் இறைவா போற்றி
ஓம் என்றும் இளையாய் போற்றி
ஓம் ஏரகத்து அரசே போற்றி
ஓம் ஐங்கரன் தம்பியே போற்றி
ஓம் ஔவைக்கு அருளாய் போற்றி
ஓம் கதிர்காம அருவமே போற்றி
ஓம் கந்த சுவாமியே போற்றி
ஓம் கந்தகிரிக் கடம்பே போற்றி
ஓம் கந்தகோட்டக் கடவுளே போற்றி
ஓம் களிற்றூர்திப் பெருமானே போற்றி
ஓம் கழுகுமலைக் கந்தா போற்றி
ஓம் கன்னித்தமிழ் முருகா போற்றி
ஓம் கார்த்திகேயன் கருணையே போற்றி
ஓம் காவடிப் பிரியோய் போற்றி

| | | |
|---|---|---|
| ஓம் | கிரவுஞ்ச பேதனா | போற்றி |
| ஓம் | குடந்தைக் குமரா | போற்றி |
| ஓம் | குமரக் கடவுளே | போற்றி |
| ஓம் | குறிஞ்சித் தலைவா | போற்றி |
| ஓம் | குழந்தை வேலனே | போற்றி |
| ஓம் | குன்றக் குடியாய் | போற்றி |
| ஓம் | குன்றுதோறாடும் குமரனே | போற்றி |
| ஓம் | கூடற் குமரா | போற்றி |
| ஓம் | கொடுங்குன்றுக் கோமானே | போற்றி |
| ஓம் | கொடுமளூர்ப் பூமானே | போற்றி |
| ஓம் | கொல்லிமலை வேடனே | போற்றி |
| ஓம் | கோவணப் பண்டாரமே | போற்றி |
| ஓம் | கௌமாரத் தலைவா | போற்றி |
| ஓம் | ஞான சக்திதரனே | போற்றி |
| ஓம் | ஞான தண்டாயுதபாணியே | போற்றி |
| ஓம் | சக்திவேல் பெற்றாய் | போற்றி |
| ஓம் | சங்கத் தலைவா | போற்றி |
| ஓம் | சடாட்சர மந்திரமே | போற்றி |
| ஓம் | சரவண பவனே | போற்றி |
| ஓம் | சண்முகத்து அரசே | போற்றி |
| ஓம் | சதாசிவ மைந்தா | போற்றி |
| ஓம் | சஷ்டி விரதமே | போற்றி |
| ஓம் | சிங்கமுகனை வென்றாய் | போற்றி |
| ஓம் | சிங்கார வேலனே | போற்றி |
| ஓம் | சிகி வாகனா | போற்றி |
| ஓம் | சிவகிரிச் செல்வா | போற்றி |
| ஓம் | சுப்பிர மணியாய் | போற்றி |
| ஓம் | சூரனை வென்றாய் | போற்றி |
| ஓம் | சென்னிமலைச் செல்வா | போற்றி |
| ஓம் | சேவற் கொடியாய் | போற்றி |
| ஓம் | சேனாதிபதிச் செவ்வேளே | போற்றி |
| ஓம் | சைவக் கொழுந்தே | போற்றி |
| ஓம் | தார காந்தகா | போற்றி |
| ஓம் | திருச்செந்தூர் வாழ்வே | போற்றி |
| ஓம் | திருப்பரங்குன்றோய் | போற்றி |
| ஓம் | திருப்புகழ் பெற்றோய் | போற்றி |
| ஓம் | திருப்போரூத் தேவா | போற்றி |
| ஓம் | திருமாலின் மருகா | போற்றி |

ஓம் திருத்தணி முருகா போற்றி
ஓம் திருவருள் தருவாய் போற்றி
ஓம் திருவிடைக்கழித் தலைவா போற்றி
ஓம் திருவினும் திருவே போற்றி
ஓம் தித்திக்கும் உருவே போற்றி
ஓம் திவ்விய ரூபனே போற்றி
ஓம் தேனாற்றுக் குரிசிலே போற்றி
ஓம் தேவ சேனாபதியே போற்றி
ஓம் தேவயானை கணவா போற்றி
ஓம் தேவாதி தேவனே போற்றி
ஓம் நக்கீரனைக் காத்தாய் போற்றி
ஓம் நந்தா விளக்கே போற்றி
ஓம் நவவீர நாயகனே போற்றி
ஓம் பராசக்தி பாலனே போற்றி
ஓம் பழநிமலை வேலனே போற்றி
ஓம் பழமுதிர் சோலையாய் போற்றி
ஓம் பன்னிரு கரத்தோய் போற்றி
ஓம் பாலசுப்பிரமணியா போற்றி
ஓம் பிரம்மனைக் குட்டினோய் போற்றி
ஓம் பிரம்ம சாத்தனே போற்றி
ஓம் பொன்னார் திருவடியே போற்றி
ஓம் மயிலேறும் மாணிக்கமே போற்றி
ஓம் மயிலம் மலையரசே போற்றி
ஓம் மயூரகிரிக் கோவே போற்றி
ஓம் மலையேறும் வள்ளலே போற்றி
ஓம் மலையைப் பிளந்தோய் போற்றி
ஓம் மனதைக் கவர்ந்தோய் போற்றி
ஓம் முருகெனும் அழகே போற்றி
ஓம் முத்தைய ரத்தினமே போற்றி
ஓம் வடிவேலைப் பெற்றோய் போற்றி
ஓம் வள்ளி மணாளனே போற்றி
ஓம் வள்ளிமைல வள்ளலே போற்றி
ஓம் வயலூரின் வாழ்வே போற்றி
ஓம் விசாகத்து ஒளியே போற்றி
ஓம் விருத்தனாய் நின்றாய் போற்றி
ஓம் வீரபாகு சோதரா போற்றி
ஓம் வேடனாய் வந்தாய் போற்றி
ஓம் வேத மந்திரமே போற்றி

ஓம் வேதனை வென்றாய் போற்றி
ஓம் வையாபுரிக் கரசே போற்றி
ஓம் ஜெகஜோதிப் பெருமாளே போற்றி

முருக அர்ச்சனை முடிந்ததும் சேனாதிராஜா சொன்னான்; "கதிரேசண்ணை நான் பெரும் மனச்சஞ்சலத்துடன் தான் இங்கு வந்தேன். அப்போது நீங்கள் மாங்கனியை அறுத்து முருகனுக்குப் படைத்துவிட்டுக் கற்பூரங் கொழுத்தி முருகனின் நாம அர்ச்சனை சொன்னீர்கள். அத்துடன் என்னையும் சொல்லச் சொன்னீர்கள். அதை நான் பெரும் பாக்கியமாகக் கருதுவதோடு எனது துன்பங்களும் நீங்கிவிட்டதாகக் கருதுகிறேன்" என்றான்.

"முருகனை ஒருமுறை நினைத்தால் அவன் ஆறுமுகத்துடன் ஆறுமுறை வருவான். முருக நாம அர்ச்சனை செய்தால் தனது பன்னிரு கைகளாலும் அள்ளிக்கொடுப்பான். இதை நான் எனது அனுபவத்தால் உணர்ந்துள்ளேன். நீ இப்போது சொன்ன முருகனின் மந்திரத்தை எப்போதும் சொல். சேனாதி, முருகனுக்குப் பன்னிரு செவிகள் உண்டு. அப்பன்னிரு செவிகளும் முருக மந்திரத்தை ரசிப்பதோடு அடியார்களின் குறைகளையும் தெரிந்துகொள்ளும். இரு செவிகளையுடைய மனிதரே தமது செவியால் கேட்டு எத்தனையோ நன்மைகளைச் செய்கிறார்கள். பன்னிரு செவிகளையுடைய முருகன் எப்படிக் கேட்டு அருள்வான் என்று கூறமுடியாதப்பா" என்றார் கதிரேசன். அவரது குரல் தளதளத்தது.

அதைக்கேட்ட சேனாதிராஜாவுக்கு மெய் சிலிர்த்தது; "கதிரேசண்ணை நான் தினமும் காலையிலும் மாலையிலும் முருக நாம அர்ச்சனை செய்து வருகிறேன். அது உங்களுக்குத் தெரியும். இருந்தாலும் எனக்கு வரும் துன்பங்களை உங்களிடம் சொன்னால் மனதிற்கு ஆறுதலாக இருக்கும். அத்துடன் முருகனுக்குச் சொன்னது போலவும் இருக்கும்" என்றான் சேனாதிராஜா.

"முருகனை வணங்குபவனுக்குத் துன்பங்கள் எதுவும் வராது. நீ வந்த விஷயத்தைச் சொல்" என்றார் கதிரேசன்.

"எனது மகன் பாலகுமாரன் ஆசிரியராகக் கடமை புரிகிறான் என்பதும், அவனுக்கு இருதயத்தில் ஒரு துவாரம் உள்ளதும் உங்களுக்குத் தெரியும். இப்போது அவன் அதனால் வேதனைப்படுகிறான். வேலை செய்தால் களைப்படைகிறான். உங்களது மகனான ஞானமுருகனுடன் அவனது நோயைப் பற்றிக் கதைத்தேன். அவர் எல்லாப் பரிசோதனைகளையும் செய்துவிட்டுச் சத்திரசிகிச்சை செய்யவேண்டும் என்றார். சத்திரசிகிச்சை செய்யாவிட்டால் பிழைக்கமாட்டான் என்றும் கூறுகிறார். அத்துடன் உடனே செய்யவேண்டுமென்றும் கூறுகிறார். எனக்குப் பயமாக இருக்கிறது. ஒரேயொரு மகன்.
அவனுக்குத் திருமணமும் செய்யக்கூடாதென்று சொல்லுகிறார்கள். நான் என்ன செய்வது..?" விம்மி விம்மி அழுதான் சேனாதிராஜா.

"சேனாதி, ஒவ்வொருவருடைய கர்மபயன் தான் நோயாக வந்து வருத்துவது. அந்தக் கொடிய கர்ம பயனை அழிப்பவன் கலியுகவரதனான முருகன். அதனால் நீ பயப்படாதே. அடியார்களின் துன்ப துயரங்களை ஆறுமுகத்தில் ஒரு முகம் நீங்கியருளும் என்பதை நீ அறியவில்லையா..? துன்பப்பட்ட உயிர்கள் யாவும் இன்பமடைய வேண்டுமென்பதே முருகனது விருப்பமாகும். அவன் தானாக வந்து துயரங்களைத் துடைத்தெடுப்பான். இன்னொருவர் மூலமாக வந்தும் துயரங்களைத் தீர்ப்பான்".

"நேற்று இரவு ஞானமுருகன் உனது மகனைப்பற்றிய விபரங்களையெல்லாம் எனக்குக் கூறினான். எந்தவிதமான பயமுமின்றிச் சத்திரசிகிச்சை செய்யலாமென்றும் கூறினான். நான் காலைப் பூசையின் போது உனது மகனின் துன்பங்களைப் போக்குமாறு முருகனைப் பிரார்த்தித்தேன். இப்பொழுது முருகனை வணங்கும் போது நீ வந்தாய். நான் பழமுதிர்ச்சோலையில் முருகனை வணங்குவது மிகமிக அரிது. நான் இங்கு வந்த போது எனது செல்லப்பிராணியான அணில் வந்து என்னை அழைத்துச் சென்றது. நன்கு கனிந்த மாங்கனி ஒன்றை அறுத்துப்போட்டது. அதனால் தான் அதை முருகனுக்குப் படைத்தேன். அதனால் உனது மகன் கட்டாயம் குணமாவான். அஞ்சேல் என அபயமளிக்கும் வேலை நினைத்து முருக அர்ச்சனை

செய்துவிட்டு மகனை வைத்தியசாலையில் கொண்டு சென்று அனுமதி. எல்லாம் சுகம் வரும்" என்றார் கதிரேசன்.

"அப்படியே செய்கிறேன் அண்ணை. உங்கள் வார்த்தையை நான் பூரணமாக நம்புகிறேன். எனது தம்பியின் வீடு விற்பனைக்கு வந்தபோது; "முருகனிடம் அதை ஒப்படைத்துவிட்டு முருக நாம அர்ச்சனை செய்" என்றீர்கள். அதன்படி அவன் செய்தான். வீடு விற்பனை செய்வதில் தடங்கல் ஏற்பட்டது. அந்தக்காலத்தில் பணத்தைப் பெற்றுத் தம்பி கொடுத்துவிட்டான். அதைவிடச் சிவகுருவின் மகன் பெரியதொரு பதவிக்கு விண்ணப்பித்திருந்தான். அவனுடன் நூற்றுக்கு மேற்பட்டோர் விண்ணப்பித்திருந்தனர். பெரும் பெரும் பணக்காரர்களும், அரசியல் செல்வாக்குள்ளவர்களும் அப்பதவிக்கு விண்ண்ப்பித்திருந்ததால் சிவகுருவின் மகன் நேர்முகப்பரீட்சைக்குச் செல்லவிரும்பவில்லை. அதை அறிந்த நீங்கள் வீடுதேடிச்சென்று வற்புறுத்தி அனுப்பினீர்கள். அப்பொழுது நீங்கள் கூறிய வார்த்தைகள் இப்பொழுதும் என்நெஞ்சில் உள்ளன".

"சிவசரவணபவா, ஒரு செயலைத் தீர்மானிப்பது முருகன். அவன் தீர்மானித்தபடி தான் காரியங்கள் யாவும் நடக்கும். மனிதர்களிற் பலர் தாம் நினைக்கும்படி தான் யாவும் நடைபெறும் என்று நினைப்பதால் தான் துன்பங்களுக்காளாகிறார்கள். என்னிடம் எந்தப் பொறுப்பும் இல்லை. நான் முருகனின் அடிமை என்று நினைத்துச் செயல்கள் யாவற்றையும் முருகனிடம் ஒப்படைத்துவிட்டுச் செயல்களைச் செய்பவன் எப்பொழுதும் வெற்றியடைவான். என்னிடம் பணமுள்ளது, செல்வாக்குள்ளது, பணமும் செல்வாக்கும் என்னை உயர்த்தும். நான் நினைத்தவற்றை யெல்லாம் செய்து தரும் என்று நினைத்து இறுமாப்புக் கொள்பவன் தான் தோல்விகளைச் சந்திக்கிறான். என் செயல்களால் ஆவது எதுவும் இல்லை. எல்லாம் அவன் செயல் என்றிருப்பவனுக்குத் துயரங்கள், துன்பங்கள் வராது. வந்தாலும் அது முருகனின் செயல் என்று நினைத்து கருமமாற்றினால் துன்பம் இராது. சோதனை இராது. நீ உயர்பதவிக்கு விண்ணப்பித்துள்ளாய். கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தானே விண்ணப்பித்தாய். இப்போது கிடைக்கமாட்டாது. அதனால் நேர்முகப் பரீட்சைக்குப்

போகத் தேவையில்லை என்று நினைக்கிறாய். இந்த முடிவை எடுக்கும் நிலையை உனக்குயார் தந்தது...? நான் சொல்கிறேன் இது உனக்குக் கிடைக்கும் என்று. அதனால் நீ போ" என்றீர்கள்"

"சிவசரவணபவனுக்கு அதில் நம்பிக்கையில்லை. இருப்பினும் தகப்பனின் வற்புறுத்தலுக்காகச் சென்றான். ஆனால் நீங்கள் கூறியபடி வேலை கிடைத்துவிட்டது. அதுபோல நிட்சயமாக எனது மகன் சுகப்படுவான்" என்றான் சேனாதிராஜா.

"உன்னுடைய மகன் சுகப்பட்டுத் திருமணம் கூடச் செய்வான். முருகனிடம் யாவற்றையும் ஒப்படைத்து விட்டு அவனைக் கொண்டு சென்று வைத்தியசாலையில் அனுமதி" என்றார் கதிரேசன்.

அப்பொழுது கோயில் மயில்கள் இரண்டும் பறந்து வந்து கதிரேசனுக்கருகில் நின்றன. ஆண்மயிலின் அலகில் ஏதோ ஒன்று இருந்தது. கதிரேசன் அதை வாங்கிப் பார்த்தார். அது கந்தசுவாமியாரின் விபூதிச்சரை.

"சேனாதி, நான் நினைத்ததை முருகன் ஆசீர்வதித்துவிட்டார். இந்தா விபூதிப் பிரசாதம். நான் ஏதாவதொரு கடமை செய்யவேண்டும் என்று நினைக்கும் நேரத்தில் முருகன் மயிலிடம் விபூதி பிரசாதம் கொடுத்து விடுவார். இன்றும் கொடுத்துவிட்டிருக்கிறார். நீ பயப்படாமல் இரு" என்றார் கதிரேசன்.

சேனாதிராஜாவுக்கு பெரும் நிம்மதியாக இருந்தது. மகன் சுகப்படுவான் என்ற நம்பிக்கையும் உண்டானது.

"கதிரேசண்ணை... கதிரேசண்ணை... எட சேனாதியே.. ஏன் மகனை ஆஸ்பத்திரியில் சேர்க்காது வைத்திருக்கிறாய்..? எங்கடை பழமுதிர்ச்சோலை முருகன் அடியவர்களுக்கு எந்தக்குறையும் ஏற்பட விடமாட்டான். சென்ற வாரம் கடும் புயலால் தள்ளப்பட்டு எனது கப்பல்கள் இரண்டு திசைமாறிப் போய்விட்டன. நாலைந்து நாட்களாகக் கப்பலைப் பற்றி எதுவும் தெரியவில்லை. எனக்குப் பழமுதிர்ச்சோலையான் மீது அளவுக்கதிகமான நம்பிக்கை உண்டு. அவன் தன்னைத் தஞ்சமென நினைத்து வணங்கும் அடியவர்களுக்கு எந்தக் குறையும்

வரவிடமாட்டான். அதனால் நான் கப்பலைக் காப்பாற்றிக் கரைக்குக் கொண்டுவந்துசேர் என்று கூறினேன். அடியார்கள் தமக்குண்டான துயரங்களை முருகனுக்குக் கூறினால் அவன் பன்னிரு செவிகளாலும் கேட்டு அதைத் தீர்த்து வைப்பான். எனது கப்பல்கள் இன்று கரைக்கு வந்துவிட்டன. அதனால் நான் முருகனுக்கு அர்ச்சனை செய்து கர்ப்பூரம் கொழுத்திவிட்டுக் கதிரேசனுக்குச் சொல்லிவிட்டுப் போக வந்தேன். கதிரேசன் இன்று மாலைக்குள் உனது கப்பல்கள் வந்து சேரும் என்றவர். கதிரேசன் எங்கே..?” என்று கேட்டார் ஏகாம்பரம்.

“இப்ப நின்றவர், பிற்பக்கம் போயிருப்பார். கதிரேசண்ணையும் பயப்படாமல் மகனைக் கொண்டு சென்று ஆஸ்பத்தரியில் அனுமதிக்கச் சொன்னவர்..” என்று சேனாதிராஜா கூறிக்கொண்டிருக்கும் போது கதிரேசன் அங்கு வந்தார். அவருடன் மயில்கள் இரண்டும் வந்தன.

“கப்பல் வந்திட்டுதண்ணை” என்றார் ஏகாம்பரம்.

“நான் சொன்னனான் தானே. என்ரை முருகன் தனது அடியவர்களின் குறைகளை எப்போதும் தீர்த்து வைப்பான்” என்றார் கதிரேசன்.

## 4

**அ**ன்று தைப்பூசம். கந்தசுவாமி கோயிலில் ஏராளமான பக்தர்கள் கூடியிருந்தனர். கதிரேசன் பிள்ளைகளுக்கு ஏடுதொடக்கிக்கொண்டிருந்தார். அவர் ஏடு தொடக்கிய பிள்ளைகள் கல்வியில் சூரர்களாக இருக்கிறார்கள். அதனால் அக்கிராம மக்களும், அயற்கிராம மக்களும் அவரிடம் தான் தமது பிள்ளைகளுக்கு ஏடு தொடக்குவார்கள். அக்கிராமத்துப் பிள்ளைகள் பிறந்தன்றிலிருந்து கதிரேசனுடன் பழகுவதால் எதற்கும் அஞ்சமாட்டார்கள், கூச்சப்படமாட்டார்கள். அவர் அவர்களைச் சந்திக்கும் போதெல்லாம் நல்ல அறிவுரைகளைச் சொல்வார், முருகனது நாமங்களையெல்லாம்

சொல்ல வைப்பார். அதனால் அவர்கள் ஏடு தொடக்கும் போது மகிழ்ச்சியாகவும், உற்சாகமாகவும் இருப்பார்கள்.

"அவர் குழந்தைகளை 'முருகா' என்றே அழைப்பார். அன்று அவர் மூன்று குழந்தைகளையும் தனது மடியில் இருத்திக் கர்ப்பூரம் கொளுத்தித் தேங்காய் உடைத்தார். பின் முருகனை நினைத்தார். அதன் பின் சொன்னார்; "முருகன்களே, நீங்கள் ஆசிரியரைப் பணிந்து, அவர்களுக்குப் பணிவிடை செய்து அவர்களிடமிருந்து ஞானத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஆசிரியரை மதிக்காத மாணவர்களுக்கும், அவர்களுக்குப் பணிவிடை செய்யாதவர்களுக்கும் கலைமகள் கல்விச் செல்வத்தை மனமுவந்து தரமாட்டாள். ஒரு பொருளைப் பெறுவது போல கல்வி என்ற ஞானத்தைப் பெறமுடியாது. குருவை மதித்து, அவரை வணங்குவதன் மூலம் மாணவன் தன்னைக் குருவிடம் ஒப்படைக்கிறான்".

"முருகனின் ஆறு திருமுகங்களில் ஒன்று ஞானத்தை உபதேசிப்பது. எல்லாம் வல்ல, எல்லாம் தெரிந்த சிவபெருமானே ஓங்காரத்தின் பொருளை முருகனிடம் கேட்டுத் தெரிந்துகொண்டார். சலசலப்புக்களுக்காட்படும் ஆசிரியன் குருவாக முடியாது. பூரணமான கல்வியும் கருணையும் யாரிடம் அமைந்திருக்கின்றதோ அவர் தான் உண்மையான ஆசிரியர். ஆசிரியர், மாணவனின் நல்லொழுக்கத்தினால் தான் பூரணமடைவார். முருகன் சிவனுக்குக் குருவானவன். அதனால் அவனைச் சிவகுரு என்கிறோம். அத்தகைய பெருமை வாய்ந்த முருகனை மனதிலிருத்திக் கல்வி என்ற ஞானத்தைப் பெறவிரும்புவோர் பெற நினைத்தால் முருகன் ஞான குருவாக வந்து உபதேசிப்பான்".

"கல்வியென்ற ஞானம் மயக்கத்தை நீக்கும். அந்த ஞானம் கைவரப்பெற்றவர்களிடத்தில் ஆணவமிருக்காது. அதனால் அவர்கள் எல்லா உயிர்களையும் முருகனாகவே காண்பார்கள். தீயானது விறகுகளைச் சாம்பலாக்குவது போல, கல்வி என்ற ஞானத்தீ அஞ்ஞானங்களையெல்லாம் சாம்பலாக்கும். அறிவைத் தருகின்ற கல்விக்கு ஒப்பானது இவ்வுலகில் எதுவும் இல்லை. சிரத்தையுள்ளவன், முருகனை நம்பியிருப்பவன், நிறைந்த கல்வி ஞானத்தைப் பெறுவான்.

கல்வியைப் பெற்றவன் மக்களுக்கு உதவுபவனாக இருப்பான். அறிவிலி, சிரத்தையில்லாதவன், கடவுளில் நம்பிக்கையில்லாதவன், கல்வி என்ற ஞானத்தைப் பெறாமையால் இவ்வுலகிலும் இன்பமாக வாழமாட்டான். அவ்வுலகிலும் இன்பமாக வாழமாட்டான். அதனால் நிறைந்த ஞானமாகிய கல்வியைப் பெறுங்கள். தினமும் கல்லுங்கள். இறக்கும் வரை கல்வியைக் கல்லுங்கள்" என்றார்.

அன்று ஏடுதொடக்க மூன்று பிள்ளைகள் வந்திருந்தனர். முன்னைய வருடங்களில் ஏடு தொடக்கப்பெற்ற மாணவர்கள் பலர் வந்திருந்தனர். அவர்களுக்காகவே கதிரேசன் கல்வி என்ற ஞானத்தைப் பற்றிப் பேசினார்.

"கல்வி என்ற ஞானத்தைச் சரிவர உணராதவர்கள் தான் பாவச் செயல்களைச் செய்கிறார்கள். இவர்கள் கல்வியறிவுள்ள மூடர்கள். மக்களுள் கடைத்தரமானவர்கள். அவாக்களினால் அபகரிக்கப்பட்டவர்கள். இவர்கள் எப்பொழுதும் அசுரர்கள் போலவே நடந்துகொள்வார்கள். இத்தகையவர்களின் உள்ளத்தில் கடவுள் இருக்கமாட்டார். அவர்கள் கடவுளைப் போற்றுவதுமில்லை".

"முருகனது ஆறு திருமுகங;களிளொன்று ஞானமுகம். இந்த ஞானமுகம் கல்வியைப் போதிக்கும். சிவனது நெற்றிக் கண்ணிலிருந்து தான் முருகன் தோன்றினான். நெற்றிக்கண்ணின் அரைப்பகுதி உமைக்குரியது. இதனால் சிவனது சக்தியான ஞானமாக முருகன் இருக்கிறான். அத்துடன் குருவாகவும் இருக்கிறான். அதனால் முருகனை வணங்கினால் குருவை வணங்கி அவரைச் சரணடைவதை ஒக்கும். அதனால் குருவான முருகன் ஞானமாகிய கல்வியை அள்ளித் தருவான். முருகனை யார் எப்படி வழிபடுகிறார்களோ அவர்களுக்கு முருகன் அப்படியே காட்சி கொடுத்து அருள் புரிவான். இந்துமதம் ஆறு மதங்களை உள்ளடக்கியுள்ள போதும் அதன் வழிபாட்டு முறையில் வேறுபாடுகள் உண்டு. மக்களின் இயல்பு வேறுபாட்டிற்கமைய தெய்வ வணக்கங்களும் மாறுபடும். மக்களிற் பலர் ஓரிரு தெய்வங்களைச் சிறப்பாக வணங்குவர். சிலர் குலதெய்வங்களுக்கு முன்னுரிமை கொடுப்பார். இப்படி

வழிபாடுகள் வேறுபட்டிருப்பினும் அவற்றிலெல்லாம் முருகன் கலந்திருக்கிறான். யார் யார் எதையெல்லாம் வணங்குகிறார்களோ அப்படியெல்லாம் மாறி மக்களுக்கு அருளும் வல்லமை கொண்டவன் முருகன். ஆறு மதங்களிலும் அவன் கலந்திருப்பதால் அவனைச் சண்முகன் என்பர். ஞானத்தைப் பலவகைகளிற் கொடுப்பவன் முருகன். கல்வியைத் தனது ஞானமுகத்தாலும் முத்தியை வேலைப்பெற்ற முகத்தாலும், பொருளை அடியவர்களின் வினை தீர்க்கும் முகத்தாலும் கொடுக்கிறான். முருகன் கற்பக விருட்சம். அவன் தனது பன்னிரு கைகளாலும் அடியவர்கள் விரும்புபவற்றையெல்லாம் அள்ளி அள்ளிக் கொடுப்பான்"

ஏடு தொடக்கல் முடிந்ததும் மக்கள் சென்று கொண்டிருந்தனர். அந்த வருடம் க.பொ.த உயர்தரப் பரீட்சை எடுக்கும் மாணவர்கள் பலர் வந்து கதிரேசனைப் பணிந்தனர்.

"மக்களே, துன்பத்தை அனுபவிப்பவர்கள், ஞானத்தைப் பெற விரும்புவோர், பொருள் தேடுவோர், ஞானிகள் ஆகிய நான்கு தரப்பினர் முருகனை வணங்குகின்றனர். ஞானம் என்பது பலவகையானது. அவற்றுள் முதலாவது ஞானம் கல்வி. நீங்கள் கல்வியென்ற ஞானவேட்கை உடையவர்கள். கல்வி என்ற ஞானத்தின் மூலம் தான் உலகில் உள்ள எல்லா ஐஸ்வரியங்களையும் பெறலாம். கல்வி என்ற ஞானத்தைத் தேடுபவர்கள் தான் மேலானவர்கள். அவர்கள் தான் முருகனுக்குப் பிரியமானவர்கள்".

"எவனொருவன் அழியாத ஞானமான கல்வியைத் தேட முயல்கின்றானோ அவனுக்கு முருகன் வலியச் சென்று உதவுவான். அவனுடைய சிரத்தையை முருகன் ஊக்குவிப்பான். அதனால் அவன் ஆசைப்பட்ட கல்வியால் வரும் பயனை அனுபவிப்பான். மக்களே, நடந்தவை, நடப்பவை, நடக்க இருப்பவை யாவற்றையும் செய்பவன் முருகன். சிரத்தை உள்ளவர்களுக்கு முருகன் முன்நின்று உதவுவான். ஒவ்வொருவரையும் முருகன் தன் ஞான முகத்தில் உள்ள கண்களால் அறிந்து கொள்வான். அதனால் நீங்கள் முருகனை நினைத்துக்கொண்டு மகிழ்வுடன் உங்கள் கடமைகளைச் செய்யுங்கள். சகல

வல்லமைகளும் பொருந்திய ஞானவானான முருகன் உங்களுக்கு உதவுவான்”.

மாதம் ஒன்று கழிந்தது. சேனாதிராஜா தனது மகனுடன் கந்தசுவாமி கோயிலுக்கு வந்தான். அவரது மகனின் சத்திர சிகிச்சை வெற்றி கரமாக முடிந்திருந்தது.

“கதிரேசண்ணை, எமது முருகன் கனவில் தோன்றியோ அல்லது குருக்கள் மூலமாகவோ சொல்லும் வாக்குகள் பலித்து வருகின்றன. நீங்களும் குருக்களும் பயப்படாமல் சத்திரசிகிச்சை செய்யும்படி கூறினீர்கள். நான் பயந்த போதும் அதை வெளிக்காட்டிக்கொள்ளாது முருகனில் நம்பிக்கை வைத்தேன். எல்லாம் நல்லபடி முடிந்துவிட்டது. வைத்தியர் மகனுக்குத் திருமணம் செய்துகொடுக்கலாம் என்று கூறிவிட்டார்”.

“துன்பங்களிலிருந்தும், மரணத்திலிருந்தும் விடுபட வேண்டுமானால் முருகனை வழிபடவேண்டும். முருகனது புகழைப் பாடுதல் வேண்டும். அதுவும் பொருள் தெரிந்து பாடுதல் வேண்டும். பொருள் தெரிந்து பாடுவதன் மூலம் தான் முருகனது பெருமைகளை உணரமுடியும். அவனது பெருமைகளைத் தெரிந்து கொண்டால் தான் பூரணமான பயன் கிடைக்கும்” என்றார் கதிரேசன்.

## 5

“**உ**ருவாய், அருவாய், உளதாய், இலதாய்
மருவாய், மலராய், மணியாய், ஒளியாய்
கருவாய், உயிராய், கதியாய், விதியாய்
குருவாய், வருவாய், அருள்வாய், குகனே!”

என்ற கந்தரனுபூதியைக் கதிரேசன் மனமுருகிப் படித்துக்கொண்டிருந்தார்.

கந்தசுவாமி கோயில் மண்டபத்தில் பலர் கண்களை மூடியிருந்து அவரது பாடலைக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

அவர் பெரிதாகப் படித்தவரல்ல. கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் தரம் ஐந்து வரை தான் படித்தவர். பின் குடும்பக் கஷ்டத்தால் பாடசாலைக்குச் செல்லாது ஊரிலுள்ள பலசரக்குக் கடையொன்றில்

சிப்பந்தியாக வேலை செய்தவர். அந்தக் கடையின் முதலாளி கதிரேசனது நடத்தையைப் பார்த்துவிட்டு தனது மகளான மகாலட்சுமியைக் கதிரேசனுக்குத் திருமணம் செய்து கொடுத்தார். அதனால் கதிரேசனுக்குப் பெரும் சொத்தும் ஏராளமான நிலபுலன்களும் சேர்ந்தன.

தினமும் காலையிலும், மாலையிலும் அவர் முருகனைத் துதித்து அவனது புகழைப்பாடுவார்.

அன்று கந்தஷஷ்டி தினம். அதனால் அவர் கந்தர் சஷ்டிக் கவசத்தைப் பாடத் தொடங்கினார்.

எதைப் பாடினாலும் எதைப்படித்தாலும் அதன் பொருளை உணர்ந்து படித்தல் வேண்டும். அதனால் அவர் படிக்கும் தேவார திருவாசகங்களுக்குக் கூடப் பொருள் சொல்வார். அவர் சொல்லும் பொருளைக் கேட்கப் பலர் கூடியிருப்பார்கள்.

அன்று நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் கதிரேசன் பாடும் கந்தர் சஷ்டிக் கவசத்தையும், அவர் அதற்குக் கூறும் பொருளையும் கேட்பதற்காகக் கண்களை மூடி மெய்மறந்திருந்தனர். அப்பொழுது கதிரேசனின் மகன் ஞானமுருகன் தனது மனைவியுடனும் பிள்ளைகளுடனும் கோயிலுக்கு வந்தான்.

"அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி".

"துதிப்போர்க்கு வல்லினைபோம், துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

கதிரேசன் ஒரு சங்கீதவித்துவானைப் போலக் காப்புச் செய்யுளைப்பாடிவிட்டு அதற்கு உரை சொன்னார்.

அடியவர்களே,

"சிவமைந்தனான கந்தனைத் துதிப்பவர்களுக்குக் கொடுமை மிகுந்த துன்பங்களைத் தந்து வருத்துகின்ற வலிமை மிக்க வல்வினைகள் யாவும் நீங்கி விடும். கந்தசஷ்டிக் கவசத்தை நெஞ்சில் பதித்துத் தினமும் ஓதுவோருக்குப் பெருஞ் செல்வம் வந்து சேர்ந்து பெருகி வளர்ந்து கொண்டேயிருக்கும். யோக நிலையும் கைகூடும்."

“நெஞ்சமே! தேவர்களின் துன்பங்களை நீக்குவதற்காக அசுரர்களுடன் போரிட்டு அவர்களை அழித்துத் தேவர்களுக்குப் பேரின்ப வாழ்வளித்த குமரனடியை நெஞ்சில் நிறுத்தித் துதிப்பதைக் குறியாகக் கொள்வாயாக”.

“சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி ஆட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலால் எனைக் காக்க வென்று வந்து
வரவர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற”

“கந்த சஷ்டி விரதத்தை அனுஷ்டித்துச் சரவணபவனின் பாதார விந்தங்களை மனதில் நிறுத்தித் தொழுபவர்களுக்கு உதவவென அருளாகிய செங்கதிர்கள் ஒளிரும் வேலுடன் வேலோன் வருவான். அவன் வரும்போது, அவனது பாதக் கமலங்களில் அணியப்பட்டிருக்கும் பல வகையான மணிகள் பொருந்திய சதங்கைகள் இனிமையாக ஒலித்துக் கீதம் பாடும். கிண்கிணிகள் ஆடும். அழகான மையல் கொண்ட நடமாடும் மயிலின் மீது ஏறி வேலால் என்னைக் காக்க வா”.

“வேலை ஆயுதமாகக் கொண்டவனே வருக. வருக. உலகின் தலைவா வருக. மயிலை வாகனமாகக் கொண்டவனே வருக! தேவர்களின் தலைவனான இந்திரனுடன் சேர்ந்து எட்டுத்திசைகளையும் காவல் செய்யும் தெய்வங்கள் அனைத்தும் வணங்கிப் போற்றும்”

“மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர

ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி ெ சளவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்''

''மந்திர சக்தியுள்ள வடிவேலை உடையவனே வருக! வருக! இந்திரனின் மருகனே வருக! வருக! குறமகளாகிய வள்ளியை நேசிக்கின்ற நெஞ்சையுடையவனே அந்த இனிய நினைவுகளுடன் வருக! வருக''

''ஆறுமுகத்தையுடைய ஐயனே வருக! திருநீற்றை உடல் முழுவதும் பூசியிருக்கும் வேலவனே தினமும் வந்தருள்க. சிரகிரி என்ற குன்றிலே குடியிருக்கும் வேலவனே விரைவாக வருக!''

''சரவணப்பொய்கையில் உதித்த சரவணபவனே நான் அழைக்காத வேளைகளிலும் சடுதியாக வருவாயாக. ரவண பவச ரரரர ரரர ரிவண பவச ரிரிரிரி ரிரிரி என்ற சரவணபவ என்ற மந்திரசக்தி பொருந்திய அட்சரங்களின் வடிவத்தை மாற்றி முதலாயும் முடிவதாயும் இடையாயும் நின்று மந்திரங்களின் அர்த்தத்தை உணர்த்துபனே வருக! வருக''

“விண்ணவர் போற்றும் சரவணபவ என்ற உனது வீர நாமத்தைப் போற்றுகின்றேன். சரவணபவனே வருக! வருக!”

“அசுரர்களின் குடிகள் முழுவதையும் பூண்டோடு அழித்த ஐயனே வருக! வருக! என்னை ஆழும் இளையோனே, பன்னிரு கரங்களிலும் பாசம் அங்குசம் முதலான பன்னிரு ஆயுதங்களைக் கொண்டவனே!”

“அகலமான ஒளிவீசும் பன்னிரு விழிகளை உடையவனே, என்னைக் காக்க வேலுடன் வா. துன்பங்களை நீக்கி பேரின்பத்தை அளிக்கும் மூலமந்திரங்கள் ஐயும் கிலியும் சௌவுமாகும்”

“ஆன்மாக்கள் அனுபவிக்கின்ற துன்பங்கள் யாவற்றையும் நீக்கிப் பேரின்பத்தை அளித்து அவற்றிற்கு விமோசனமளிக்கும் உனது மூலமந்திரங்களான ஐ. கிலி, சௌ என்ற மூன்றும் எனது மனதைக் கட்டுப்படுத்தி ஆள்வதற்காகவும் நெருப்பும் ஒளிவடிவான ஓங்காரமும் குண்டலினி சக்தியும் இணைந்து ஒன்றாகத் திகழும் ஓங்கார வேலை உடையவனே தினமும் ஒளிப்பிழம்பாக என்முன் ஒளிரவேண்டும்”.

“பிரணவ மந்திரத்தின் மூலமாக விளங்கும் அ, உ, ம, விந்து, நாதம், சக்தி ஆகியவற்றை ஆறுமுகங்களாகப் பெற்ற சிவ மைந்தனாகிய குகனே தினமும் என்னிடம் வருக”

“ஆறுதிருமுகங்களில் ஆறு அணிமுடிகளை அணிந்து, ஆறு அழகிய திருநீறணிந்த நெற்றிகளையும், அழகிய நீண்ட புருவங்களையும், நன்னெறிகளைத் தோற்றுவிக்கும் நெற்றியில் நவமணிகளால் செய்யப்பட்ட நெற்றிச் சுட்டிகளையும் அணிந்து”

ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகு உடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்

நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம் பொலிமுழங்க
செககண செககண செகண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
எந்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதன் என்று
உன்திரு வடியை உறுதியென்று எண்ணும்
என்தலை வைத்து உன் இணையடி காக்க
என்னுயிர்க்கு உயிராம் இறைவன் காக்க

"பன்னிரு செவிகளிலும் குண்டலங்களையும் அணிந்து, வலிமை மிகுந்த பரந்த அழகிய மார்பில் பல்வகையான சிறப்புக்களைப் பெற்ற அணிகலன்களையும் அணிந்து,"

"தேர்ந்தெடுக்கப்பட்ட நல்லமணிகளால் கோர்த்துக்கட்டிய நவரத்தின மாலையும், முப்புரிகளையுடைய பூ நூலையும், முத்துக்கள் பிரகாசிக்கின்ற மாலைகளையும் கொண்ட மார்பையும் விபரிக்க முடியாத அழகைக்கொண்ட வயிற்றையும் உடையவனே,"

"மென்மையான இடையில் சுடரைப் போல ஒளி வீசுகின்ற பட்டு ஆடைகளை அணிந்தவனே, நவரத்தின மணிகள் பதித்த கவசமும் அழகிய இருதொடைகளையும் அதற்கிணையான முழந்தாள்களையும் உடையவனே,

"உனது திருவடிகளில் சிலம்புகள் எவ்வேளையிலும் முழங்கிக்கொண்டேயிருக்கும். அவை செககண செககண, செககண செககண, மொகமொக

மொகமொக, மொகமொக மொகென என்றும், நகநக நகநக, நகநக நகென, டிகுகுண டிகுடிகு, டிகுகுண டிகுண, ரரரர ரரர என்ற மந்திர அட்சரங்களை முழங்கிய வண்ணம் இருக்கும். ரிரிரிரி ரிரிரிரி, ரிரிரிரி ரிரிரி, டுடுடு டுடுடு, டுடுடு, டுடு, டகுடகு டிகுடிகு, டங்கு டிங்குகு என்ற மூல மந்திரங்களின் வடிவானவனே, நான்முகனைச் சிறையில் அடைத்துப் படைத்தல் தொழிலைச் செய்ய விடாது தடுத்த மயில்வாகனத்தை உடையவனே, மூலப் பொருளானவனே, என்னை ஆட்கொண்ட முருகப்பெருமானே, தந்தைக்குப் பிரணவ மந்திரத்தின் உட்பொருளை உபதேசித்து அடியவர்களுக்கு வரமளித்து அவர்களை மகிழ்வடையச் செய்யும் லீலா வினோதனே, உனது திருவடிகளே உறுதியானவை என்று எண்ணும் எனது தலையின் மீது உனது திருப்பாதங்களை வைத்து என்னைக் காப்பாற்றுவாயாக. எனது உயிருக்கு மேலானவனே, என்னைக் காத்தருள்வாய்''

பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என் இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாண் ஆம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க

பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடி இணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க

"உனது கருணை மிகுந்த பன்னிரு விழிகளாலும் உன் பாலகனாகிய என்னைக் காப்பாயாக! எனது முகத்தை உனது அழகான வேல் காக்கட்டும். தினமும் திருநீறு அணியும் எனது நெற்றியை உனது புனிதத்தன்மையுடைய வேல் காக்கட்டும்"

"அருளாகிய கதிர்களைப் பொளியும் உனது கதிர் வேலானது எனது இரு கண்களையும் காக்கட்டும். எனது இரண்டு செவிகளையும் வேலவனான நீ காப்பாயாக. நாசித்துவாரங்கள் இரண்டையும் உனது நல்வேல் காக்கட்டும்"

"உனது திருப்புகழைப் பேசுகின்ற எனது வாயை உனது பெருமை மிக்க பெருவேல் காக்கட்டும். எனது முப்பத்திரண்டு பற்களையும் முனைந்து சென்று அசுரர்களை அழித்த வேல் காக்கட்டும். உன் திருப்புகழைப்பாடும் என்நாவைச் சிவந்த உன் வேல் காக்கட்டும்"

"எனது கன்னங்கள் இரண்டையும் அருட்கதிர்களை வீசுகின்ற வேல்காக்கட்டும். எனது இளமை பொருந்திய கழுத்தை உனது இனிமையான வேல் காக்கட்டும். எனது மார்பை இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற உனது இரத்தினவடிவேல் காக்கட்டும்"

"பெண்களின் வனப்பு மிக்க மார்பகங்களை உனது பெருமை பொருந்திய திருவேல் காக்கட்டும். இருதோள்களும் வளம் பெறுமாறு உனது வடிவேல் காக்கட்டும். பிடரிகள் இரண்டையும் பெருமை மிக்க உன் வேல் காக்கட்டும்"

"எனது முதுகை அழகிய உனது அருள்வேல் காக்கட்டும். எனது விலா எலும்புகள் பதினாறையும் உனது பருத்த வேல் காக்கட்டும். உனது வெற்றி வேலான எனது வயிற்றை நல்லபடி காக்கட்டும்"

“எனது சிற்றிடை அழகுபெற உனது செம்மை நிறங்கொண்ட செவ்வேல் காக்கட்டும். எனது அறுநாண்கயிற்றை உனது நல்வேல் காக்கட்டும். ஆண் குறியையும் பெண்குறியையும் உனது அயில்வேல் காக்கட்டும்”

“பிட்டம் இரண்டையும் உனது பெருவேல் காக்கட்டும். எனது வட்டவடிவமான குதத்தை உனது வலிமை பொருந்திய வடிவேல் காக்கட்டும். எனது பருத்த தொடைகள் இரண்டையும் பருவேல் காக்கட்டும்”

“கணைக்காலையும் முழந்தாளையும் உனது கதிர்வேல் காக்கட்டும். ஐந்தைந்து விரல்களுடன் அமைந்த எனது பாதங்கள் இரண்டையும் உனது அருளைச் சொரிகின்ற அருள்வேல் காக்கட்டும். கைகள் இரண்டையும் கருணையைப் பொழிகின்ற உனது கருணைவேல் காக்கட்டும்”

முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நல்துணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்

அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லினும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்

"முன்கையிரண்டையும் போரிடும் உனது முரண்வேல் காக்கட்டும். பின்னையிரண்டிலும் திருமகள் இருக்க வேண்டும். எனது நாவில் சரஸ்வதி அமர்ந்திருந்து எனக்கு நல்ல துணையாக இருத்தல் வேண்டும்".

"தாமரைப்பூவைப் போன்ற தொப்புளை நன்மை செய்கின்ற நல்ல வேல் காக்கட்டும். வாதநாடி, பித்தநாடி, சிலேத்துமநாடி என்ற மூன்று நாடிகளையும் உனது கூரிய வேல் காக்கட்டும். எப்பொழுதும் என்னை அசுரர்களை எதிர்க்கின்ற எதிர்வேல் காக்கட்டும்"

"உனது அடியவனாகிய எனது வதனம் துன்பங்களால் வாடியிருக்கும் வேளைகளில் உடனே வந்து உனது கனகவேல் காக்கட்டும். பகல் வேளைகளில் வரும் துன்பங்களை வைரங்கள் பதித்த வச்சிர வேல் காக்கட்டும்"

"முன்னிரவில் எனக்கு வரும் துன்பங்களை அணுகவிடாத உனது அனையவேல் காக்கட்டும். முன்னிரவின் பின்பும் சாமவேளைகளின் போதும் எனக்கு வரும் துன்பங்களை அசுரர்களை எதிர்த்து அழித்த எதிர்வேல் காக்கட்டும். நான் துன்பப்படும் வேளைகளில் தாமதமில்லாமல் வந்து உனது சதுர்வேல் காக்கட்டும்"

"உனது கனகவேலானது என்னை எந்நேரமும் காக்கட்டும். நொடிப்பொழுதும் தவறாமல் உன் திருப்பார்வை என் மீது படவேண்டும். எனக்கு வருகின்ற தடைகள் யாவற்றையும் நீ தாக்கி அழித்தல் வேண்டும்"

"நான் செய்த பாவங்கள் பொடிப்பொடியாகச் சிதறி அழிவதற்கு உனது திருவிழிகளால் என்னைத் தொடர்ந்து பார்ப்பாயாக. பகைவர்களால் ஏவப்படும் பில்லி சூனியங்களும் அதனால் உண்டாகும் பெரும் பகைகளும் உனது அருளால் அகலவேண்டும். வல்லமை பொருந்திய பூதங்களும், கொள்ளிவாற் பேய்களும் என்னை அணுகாமல் காத்தருள்க"

“துன்பங்கள் பலவற்றைக் கொடுக்கும் மந்திரங்களுக்கு அடங்காத முனிகளும், பிள்ளைகளைத் தின்னும் கொடிய புழக்கடை முனியும், வாயிலிருந்து நீரைக்கக்கும் கொடிய நோய்களும், குள்ளப் பேய்களும்,”

“பெண்களை இச்சித்து அவர்களைப் பீடித்துத் தொடர்ந்து இன்னல்கள் கொடுக்கும் பிரம்ம ராட்சதப் பேய்களும், உன் அடியவனான என்னைக் கண்ட மாத்திரத்தில் பயத்தால் அலறிக் கலங்க வேண்டும். இரிசி என்ற காட்டேரியும் அதோடு சேர்ந்து துன்பங்களைக் கொடுக்கும் துர்ப்பேய்க் கூட்டமும்,”

“பகல் வேளைகளிலும், இருட்டிலும் எதிர்ப்பட்டுத் துன்பங்கள் பலவற்றைச் செய்யும் கரும்பேய்களும், பல்வகையான மந்திரப் பூசைகள் செய்யப்படும் காளியும், காளியுடன் சேர்ந்த துர்த்தேவதைகளும், பீடித்தால் விட்டகலாத பேய்களும், அதனுடன் சேர்ந்த பல்வகையான மிகுந்த பலமுடைய பேய்களும்,”

“தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு

முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணல் அதுவாக
விடுவிடு வேலை வெருண்டு அது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்''

''கொடியவர்களும் சண்டாளர்களும் எனது பெயரை யாராவது சொல்லக் கேட்டதும் தமது தலையில் இடிவிழுந்தது போல அஞ்சி ஓடிடவேண்டும். யானையின் காலடிபட்ட மண்ணை எடுத்து அரும்பாவைகள் செய்து,''

''பூனையின் மயிர்களும், குழந்தையின் எலும்பும், நகமும், மயிரும், நீண்ட முடியும், மண்டை ஓடும் பல்வகையான பாவைகளுடன் பலவற்றைக் கலசத்தில் இட்டு,''

''வீடுகளில் புதைந்த வஞ்சனையுடன் சேர்ந்த செருக்கும், மந்திரம் ஓதப்பட்ட பதுமையும், சில்லறைக் காசும், குருதி கலந்த சோறும்,''

''மந்திரமோதப்பட்ட அஞ்சணமையும், தீமையொன்றையே செய்கின்ற போக்கும் கொண்டோர் உனது அடியவனான என்னைக் கண்டால் பயத்தினால் மனம் தடுமாறி செயலிழந்துவிடவேண்டும். பகைவர்களும் வஞ்சனை செய்பவர்களும் வந்து என்னை வணங்கவேண்டும்''.

''யமனின் தூதுவர்கள் என்னைக் கண்டு மதிகலங்கி, அஞ்சி நடுங்கியவாறு பயந்து தடம்புரண்டு வாய்விட்டு அலறியவாறு புத்தி தடுமாறி ஓடிட வேண்டும்''.

''ஓடும் போதும், படிகளில் தடக்கி விழுந்து புரழும்போதும் அவர்களின் அங்கங்கள் செயற்படா வண்ணம் எல்லா அங்கங்களையும் அவர்கள் கதறி அழும்படியாக உனது பாசக் கயிற்றால் கட்டுவாயாக. இறுக்கமாகக் கட்டு. அவர்களது கைகளும் கால்களும் முறிந்து போகும்படியாக இறுக்கிக் கட்டு''

“இரக்கம் பாராது அவர்கள் கதறக் கதறக் கட்டுவாயாக! அவர்களது விழிகள் பிதுங்கும் படியாக அவர்களது தலையிலே குட்டு. செக்கிலிட்ட விதைகள் செதில் செதிலாகப் பிரிக்கப்படுவது போல அவர்களை வருத்துவாயாக”

“காண்போரைச் சொக்க வைக்கும் குமரா, உனது கூரிய வேலால் சூரனை அழித்தது போலக் கூர்மையான அந்த வேலால் எனது பகைவர்களெயெல்லாம் குத்தி அழி. சூரியன் தனது தணலொளியால் பகைவர்களை எரிப்பது போல உனது வேலின் ஒளியால் பகைவர்களைப் பற்றி எரியச் செய்”

“கதிரவனின் தணல் போன்ற வெப்பமும் ஒளியும் பொருந்திய உனது எரி தழல் வேலை விரைவாக விடு. புலியைப் போன்றவர்களும், நரியைப் போன்றவர்களும் நாயைப் போன்றவர்களும்”

“எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்து உயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீஎனக்கு அருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகளொளி பவனே
பரிபுர பவனே பவம்ஒளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்

காத்து தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்து உறை கதிர்வேல் முருகா''

"எலியைப் போன்றவர்களும், கரடியைப் போன்ற பகைவர்களும் என்னைத் தொடர்ந்து வரமுடியாது ஓடவும், தேள், பாம்பு, கொடுக்கன், பூரான் போன்ற விஷஜந்துக்கள் கடித்தால் அங்கங்களில், ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்கி அற்றுப்போக வேண்டும். கண்ணுக்குப் புலப்படாது எனது தேகத்தில் மறைந்திருக்கும் நோய்களும், சுளுக்கும், ஒற்றைத் தலைவலியும், வாதம், பைத்தியம், வலிப்பு, பித்த நோய்கள், சூலை நோய்கள், காசநோய்கள், குக்கல், சிரங்கு, சொறி, குடைச்சல், குடற்கட்டி, பிளவை, படர்தொடர் வாழை, கடுவன், படுவன் போன்றனவும் கை காலில் படரும் சிலந்தி நோய், பற்கொதி, பல் அரணை, இடுப்பில் வரும் கடி போன்ற எல்லா நோய்களும் என்னைக் கண்டதும் தாமாகவே விலகிச் செல்ல நீ எனக்கு அருள் புரிய வேண்டும். அத்துடன் பதின்னான்கு உலகங்களிலும் வாழ்வோர் எனக்கு உறவாளர்களாக வேண்டும். அங்கு வாழ்கின்ற ஆண்களும் பெண்களும் மற்றும் அனைவரும் எனக்கு உதவிடல் வேண்டும்''.

"உலகை ஆளும் மன்னர்கள் எல்லோரும் என்னுடன் மகிழ்ந்து உறவாடுதல் வேண்டும். உன்னைச் சரவணபவனெனத் துதிப்பதே உன் நாமங்கள் யாவற்றிலும் சிறந்தது. மிகவும் ஒளி பொருந்தியவனே!''

"திரிபுரங்களை எரித்த சிவபெருமானின் மைந்தனே! ஒளிமயமானவனே! பரந்த உலகின் தலைவனே! திருமாலுக்கும் திருமகளுக்கும் மருகனே! தேவலோகத்தைக் காத்தவனே!''

"தேவர்களை அசுரர்களிடமிருந்து சிறைமீட்ட கந்தனே! குகனே! அருட்கதிர் வீசும் வேலை உடையவனே! கார்த்திகைப் பெண்களின் மைந்தனே! கடம்ப மலர்மாலையை மிகுந்த விருப்புடன் அணிபவனே! கடம்பன்

என்ற அசுரனையும், இடும்பன் என்ற அசுரனையும் அழித்துத் தேவர்களைக் காத்த இனிய வேலையுடைய முருகா! தணிகை மலை மீது கோயில் கொண்டுள்ள தணிகாசலப் பெருமானே! சங்கரனான சிவனின் புதல்வனே! கதிர்காமத்தில் உறைந்திருக்கும் கதிர்வேல் முருகா!''

''பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தில் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகக்கத்து அரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யான் உனைப் பாட
எனைத்தொடர்ந்து இருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசம் ஆக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன் அருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவள் ஆமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் என்மீதுன் மனமகிழ்ந்து அருளித்
தஞ்சம் என்றடியர் தழைத்திட அருள்செய்''

''பழனி மலையில் வாழும் பாலகுமாரா! திருவாவினன் குடியில் வாழும் அழகிய வேலையுடையவனே! திருச்செந்தூரில் கோயில் கொண்டிருக்கின்ற செங்கல்வராயா!''

“சமராபுரி என்னும் திருப்போரூரில் எழுந்தருளியிருக்கின்ற ஆறுமுகப் பேரரசே, கருமேகத்தைப் போன்ற கூந்தலையுடைய கலைமகள் என் நாவில் இருந்தருளுவதால் நான் உன்னைப் பாடுகிறேன்”

“என்னுக்குள்ளேயே நிழலைப் போலத் தொடர்ந்திருக்கும் என்னுயிரான முருகா! உன்னைப் பரவசத்துடன் பாடினேன்! உன்னை விருப்புடன் நாடி திருநீற்றை மிகுந்த விருப்புடன் நான் நெற்றியில் அணிகிறேன் என்னைப் பீடித்திருந்த பாசம் என்ற வினைகள், உலகப் பற்றுக்கள் யாவும் நீங்கி உனது திருவடிகளை அடைய உனது திருவருள் வேண்டும்”

“என்னை அன்புடன் இரட்சிப்பாயாக! உணவும், வேண்டிய செல்வமும் போதும் போதும் என்று நான் சொல்லச் சொல்ல வேலாயுதனான நீ தந்தருளவேண்டும். சகல சித்திகளும் பெற்று வாழ அடியேனுக்கு அருள் செய்வாயாக”

“வாழ்க! வாழ்க! மயில்வாகனனே. வாழ்க! வாழ்க! வாழ்க வடிவேல் வாழ்க! வாழ்க! வாழ்க குன்றுகளில் குடியிருக்கும் குருவே வாழ்க”

“வாழ்க! வாழ்க! மலையில் வாழும் குறமகளான வள்ளியுடன் சேர்ந்து வாழ்க! வாழ்க! வாழ்க! உனது சேவற்கொடி வாழ்க! வாழ்க! வாழ்க! எனது வறுமைகள் நீங்க”

“என்னிடமுள்ள எத்தனையோ குறைகள் எத்தனையோ பிழைகள் இன்னும் எத்தனையோ பிழைகளை நான் செய்தாலும் என்னைப் பெற்ற தந்தை நீ, குருவும் நீ அதனால் அத்தனையையும் பொறுத்தருளல் வேண்டும். அது உனது கடமை”

“உன்னை மணவாளனாக அடைந்த குறமகளான வள்ளி என்னைப் பெற்ற தாயன்றோ! அதனால் என்னை உனது பிள்ளையென்று எண்ணி அன்பும் பிரியமும் கொண்டு மைந்தனான எனக்கு அருள் செய்வாயாக! உன்னைத் தஞ்சமென அடையும் அடியவர்கள் அனைவரும் தழைத்தோங்க அருள் செய்”.

"கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடன் ஒரு நினைவது ஆகி
கந்தர் சஷ்டி கவசம் இதனை
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத்தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறு அணிய
அட்ட திக்கு உள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங்கு அருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்து அடி
அறிந்து எனதுள்ளம் அட்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்து உணவாகச்"

"முருக பக்தனான பாலன் தேவராயன் இயற்றிய கந்தசஷ்டிக் கவசத்தைத் தினமும் காலையிலும் மாலையிலும் உடல் உளத்தூய்மையோடு நீறணிந்து முருகனது திருப்பாதங்களை மனதிலிருத்திப் பக்தி சிரத்தையுடன் ஓதினால் முருகன் தனது முப்பத்தாறு வகையான திருவுருவங்களுடன் காட்சி தந்து அருள் புரிவான். அத்துடன் அட்டதிக்குப் பாலகர்களும் இந்திரனும் நேரில் தோன்றி அருள் புரிவார்கள்"

"பகைவர்கள் நண்பர்களாகி வேண்டிய உதவிகளைப் புரிந்து உங்களை வணங்குவார்கள். நவக்கிரகங்கள் மனம் மகிழ்ந்து வேண்டிய நன்மைகள் யாவற்றையும் தரும். மன்மதனைப் போல அழகுபொலியும். பதினாறு வயதுடையவர்களைப் போல என்றும் உறுதியுடன் வாழலாம். கந்தப்பெருமானின் கையில் உள்ள வேலின்

சக்தியை ஒத்த கந்தசஷ்டிக் கவசத்தைப் பிழையின்றி அதன் பொருளை உணர்ந்து ஓதுபவர்களுக்கு மெய்ஞானம் தோன்றும். கந்தசஷ்டிக் கவசத்தை முறைப்படி ஓதுவோரைக் கண்டவுடனேயே பேய் பிசாசுகள் நடுநடுங்கி அஞ்சி ஓடும். அவர்களின் அருட்பார்வையின் சக்தியைத் தாங்கமுடியாது தீயவர்கள் பொடிப்பொடியாகச் சிதறுவார்கள். கந்தர் சஷ்டிக் கவசத்தின் பெருமை முருகபக்தர்களின் நினைவில் நடனம் புரிந்து கொண்டிருக்கும். தீயவர்களுக்கு அது சர்வசத்துருவாய் இருக்கும். அகங்காரத்தை அடித்து நொருக்கும். வேண்டிய இன்பங்களையும் முத்தியையும் தரும். அதனால் கந்தர் சஷ்டிக் கவசத்தைத் தினமும் ஓதுங்கள்''

''சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்து அமுதளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்து ஆட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்குகோர் அரசே
மயில்நடம் இடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்,
சரணம் சரணம் சண்முகா சரணம்''.

''கதிரேசன் கந்தர் ஷஷ்டிக் கவசத்தைப்பாடி அதற்கு உரை சொல்லிவிட்டு எழுந்தார். அவரது மகன் ஞானமுருகன் வந்து தந்தையின் பாதம் பணிந்தான். அவனது மனைவியும் பிள்ளைகளும் அவரது பாதம் பணிந்தனர்''

''மகனே, இன்று காலையில் இருந்து உனது நினைவுதான் எனது மனதை ஆக்கிரமித்திருந்தது. இன்று நீ

வருவாயென எதிர்பார்த்தேன். எப்படிச் சுகமாக இருக்கிறாயா..? எப்படி அம்மா சுகமாக இருக்கிறாயா..? என்னுடைய குட்டிகள் எல்லாம் சுகமா.." என்று கேட்டவாறு பேரனைத் தூக்கி முத்தமிட்டார் கதிரேசன்''

"மாமா, உங்களுக்கு பாலும் பழமும் கொண்டுவந்தோம். இந்தாருங்கள்" என்று கூறிப்பாலையும் பழங்களையும் கொடுத்தாள் ஞானமுருகனின் மனைவி.

"அப்பா.."

"சொல்.." முறுவலித்தார் கதிரேசன்.

"அப்பா, எனக்குப் பதவியுயர்வு கிடைத்துள்ளது. தலைமை வைத்தியராக பெரிய வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டிருக்கிறேன். இதனால் வேதனம் அதிகரிக்கும். மதிப்பும் மரியாதையும் கூடும்" என்றான் ஞானமுருகன்.

கதிரேசன் உடனே பதில் கூறவில்லை.. "முருகா" என்றார். மீண்டும் சில நிமிடங்கள் மௌனமாக இருந்துவிட்டுச் சொன்னார்; "மகனே, எமது கிராமத்தில் உள்ள வைத்தியசாலைக்கு கடமையாற்ற எவரும் வரவமாட்டார்கள். நீ போனால் இங்குள்ள முருகனடியவர்கள் சொல்லெனாத் துன்பமடைவர். நீ நிபுணன். அந்த நிபுணத்துவத்தால் கடினமான சத்திரசிகிச்சைகள் கூடச் செய்கிறாய். சென்ற மாதம் சேனாதிராஜாவின் மகனுக்குப் பெரியதொரு அறுவைச் சிகிச்சை செய்தாய். அவனது வாழ்வு அழிந்துவிடுமென்றே எல்லோரும் நினைத்தனர். ஆனால் ஞானமுருகனான நீ அவனை வாழவைத்திருக்கிறாய். அதனால் அவன் திருமணம் கூடச் செய்யப்போகிறான். மகனே, உனக்கு ஏன் பணம் வேண்டும் என்று சொல் நான் தருகிறேன். பதவி உயர்வு வேண்டாம். எல்லாவற்றையும் வேலன் தனது வேலால் தருவான். மகனே, நீ வெளிநாட்டில் கற்றவன். அந்தக் கல்வி எமது மக்களுக்குப் பயன்படல் வேண்டும். பிற ஊர்கள் பலவற்றிலிருந்து கூட உன்னிடம் சிகிச்சை பெறப் பலர் வருகிறார்கள். நீ தலைமையகத்திற்குச் சென்றால் ஊரவர்களைக் கவனிக்கமாட்டாய். அதைவிட அவர்கள் உன்னைவிடமாட்டார்கள். நீ நினைப்பதெல்லாவற்றையும் வேல்முருகன் தருவான்" என்று

கூறி நிறுத்தியவர் சிறிது நேரத்தின் பின்; ‘‘கட்டாயம் போகத்தான் வேண்டும் என்று நினைத்தால் நீ போ..” என்றார்.

ஞானமுருகனின் மனைவி பெரு மகிழ்வுடன் சிரித்தாள். பின்பு சொன்னாள்; “மாமா அவர் போவது எனக்கும் எனது பெற்றோருக்கும் விருப்பமில்லை. நான் இங்குவரும்போது வேலுக்கு மாலை சூடி, கர்ப்பூரம் கொழுத்தி வணங்கி நேர்த்தி வைத்துவிட்டுத்தான் வந்தேன்”

“மகனே, செல்வம், செல்வாக்கு, மதிப்பு, புகழ் யாவும் முருகன் உனக்குத் தந்துள்ளான். இதற்கு மேல் நான் எதையும் சொல்ல விரும்பவில்லை”

“அப்பப்பா நான் மயில்களைப் பார்க்கவேண்டும். அவற்றிற்குத் தானியங்கள் கொண்டுவந்துள்ளேன்” என்றான் பேரன்.

“வாடா பேரா..” என்று அவனைத் தூக்கிய கதிரேசன்; “வாருங்கள் பழமுதிர்ச்சோலைக்குச் செல்வோம்” என்றார்.

அவர்கள் பழமுதிர்ச்சோலைக்கு வந்ததும் ஞானமுருகனின் மனைவி சொன்னாள்; “உண்மையில் இது பழமுதிர்ச்சோலை தான். எனக்கென்றால் வீட்டுக்குச் செல்லாது இங்கேயே இருக்கவேண்டும் போலுள்ளது”.

கதிரேசன் மகிழ்வுடன் சிரித்தார். பின்; “முருகா.. முருகா..’’ என்று பலமாக அழைத்தார்.

தோப்பின் பின்னால் இருந்து இரண்டு மயில்கள் பறந்து வந்து கதிரேசனின் அருகில் நின்றன; “உங்களை எனது பேரன் பார்க்க விரும்புகிறான்” என்றார் கதிரேசன்.

அவரது பேரன் மயில்களுக்குத் தானியங்களைப் போட்டான். அங்கு வருவோருக்குக் கதிரேசன் கரும்பும், பழங்களும், செவ்விளநீரும் கொடுப்பார்.

அங்கு வேலை செய்யும் சங்கரப்பிள்ளை மாம்பழங்களும், கரும்பும், செவ்விளநீரும் கொண்டுவந்து அவர்களுக்குக் கொடுத்தான். ஞானமுருகன் அங்கிருந்த உண்டியலில் ஆயிரம் ரூபா தாள்கள் பலவற்றைப் போட்டான்.

அவர்கள் புறப்பட்டபோது கதிரேசன் சொன்னார்; "மகனே, முருகனைப் போல நான் இவ்வூர் மக்களை நேசிப்பதால் தான் அப்படிச் சொன்னேன். இனி உனது விருப்பம்.."

"எனக்கென்று விருப்பம் இருந்திருந்தால் நான் உங்களைக் கேட்க வந்திருக்கமாட்டேன். உங்கள் ஆசியும் அனுக்கிரகமும் இருந்தால் எல்லாம் என்னைத் தேடிவரும்" என்று சிரித்தான் ஞானமுருகன்.

"மகனே, எனது அபிப்பிராயத்தைச் சொன்னேன். உனக்கு முப்பத்தாறு வயது. குடும்பத்தன்.. பொறுப்பான பதவியில் இருப்பவன்.." அவர் கூறிக்கொண்டிருக்கும் போது ஞானமுருகன் சொன்னான்; "அப்பா எனக்கு ஐம்பது வயதானால் கூட நான் உங்களின் குழந்தைதான். எனக்கு விருப்பம் இருந்தது அதனால் உங்களுக்குச் சொன்னேனே தவிர உங்களது அனுமதியில்லாமல் செல்வேனா..?" என்றான். அவனது குரல் தளம்பியது.

"மகனே, உனக்கு இதைவிடப் பெரிய பதவியும் மதிப்பும் மரியாதையும் விரைவில் வேல்முருகன் உனக்குத் தருவான்"

"அப்பா எனது எதிர்காலத்தை அறியவே நான் இங்கு வந்தேன். ஊரவர் எல்லோரும் உங்களது பேச்சை வேதவாக்காக ஏற்கும்போது உங்கள் மகனான நான் உங்கள் பேச்சைத் தட்டி நடப்பேனா;?" அதைச் சற்று அழுத்திச் சொன்னான்.

"மாமா, நான் கர்ப்பமாக இருக்கிறேன். இன்று தான் இவர் பரிசோதனை செய்து சொன்னார். முதலில் உங்களுக்குத் தான் கூறுவது வழக்கம். இந்த நிலையில் பதவியுயர்வென்று தூர இடஞ்செல்லலாமா..?"

"அப்ப இன்னொரு முருகன் எமது குடும்பத்திற்கு வரப்போகிறான்" என்று மகிழ்வுடன் சொன்னவர். மண்டபத்துக்குள்ச் சென்று மாவிளக்கு ஒன்றை எடுத்து வந்தார்.

“மருமகளே, நேற்றுச் சேனாதிராஜா முருகனுக்கு மாவிளக்கிட்டவன். இந்தா பிடி சாப்பிடு” என்றார்.

அவள் மகிழ்வுடன் வாங்கி உண்டாள்.

“நாங்கள் வாறம் அப்பா” என்று புறப்பட்டான் ஞானக்குமரன்.

“நான் வரமாட்டன் மயில்களுடன் விளையாடப்போகிறேன்” என்றான் ஞானமுருகனின் மகன்.

“சரி அவனை விட்டுவிட்டுப் போங்கள். நான் அனுப்பி வைக்கிறேன்” என்றார் கதிரேசன்.

மகனை விட்டுவிட்டுப் புறப்பட்டான் ஞானமுருகன்.

## 6

**ஞா**னமுருகன் சென்றுவிட்டான். கதிரேசன் தாமரைத் தடாகத்திற்கு வந்தார். ஞானமுருகன் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து மருத்துவ பீடத்திற்குத் தெரிவான போது அந்த நினைவாகக் கதிரேசன் அந்தத் தடாகத்தைக் கட்டினார். செந்தாமரை மலர்களும், வெண்டாமரை மலர்களும், நீலோற்பலமும் மலர்ந்திருந்தன. திருவிழாக்காலங்களிலும் கந்தசஷ்டி விரதநாட்களிலும் வேண்டியளவு தாமரைப்பூ அந்தத் தடாகத்தில் மலர்ந்திருக்கும். பழமுதிர்ச்சோலையையும் அத்தாமரைத் தடாகத்தையும் பராமரிப்பவன் சிவசண்முகநாதன். அவன் பட்டதாரி ஆசிரியன். தினமும் வந்து தாமரைத் தடாகத்தில் நீந்தி விளையாடும் மீன்களைப் பார்த்து ரசிப்பான். கடந்த நாலைந்து தினங்களாக அவன் வரவில்லை.

சிவசண்முகநாதன் ஏழை. கஷ;டப்பட்டுப் படித்துப் பட்டதாரி ஆகிவிட்டான். அவன் படிப்பதற்கு வேண்டிய உதவிகளையெல்லாம் கதிரேசன் தான் செய்து வந்தார். தான் பணவசதியில்லாததால் கற்க முடியாததைப் போல இனியாரும் பணவசதியின்மையால் கற்காது விடக்கூடாது என்ற நல்ல எண்ணமுடையவர் கதிரேசன்.

சிவசண்முகநாதன் அவ்வூரில் வாழ்ந்த உயர்சாதிக்கார வணிகனான பொன்னம்பலத்தின் மகள் ஆரணியை விரும்பினான். அவளும் அவனை விரும்பினாள்.

சிவசண்முகநாதனின் தந்தை கந்தையா பொன்னம்பலத்தின் வீட்டில் கூலிவேலை செய்பவன். அதனால் பொன்னம்பலம் சிவசண்முகநாதனைத் தனது மகளுக்குத் திருமணம் செய்து கொடுக்கவிரும்பவில்லை. அவன் கூலியாட்களை ஏவிப் பல முறை சிவசண்முகநாதனைத் தாக்குவித்தான்.

சிவசண்முகநாதன் கடமை செய்யும் பாடசாலை அதிபர் பொன்னம்பலத்தின் இரத்த உறவினன். அதனால் அவர் சிவசண்முகநாதனுக்குப் பலவழிகளாலும் தொல்லைகள் கொடுத்துக்கொண்டிருந்தார். இறுதியாகச் சிவசண்மகநாதனுக்குக் கற்பிக்கத் தெரியாது என்று கல்விப்பணிப்பாளருக்குக் கூறிச் சிவசண்முகநாதனை ஊருக்கு வெளியே நூறு மைல்களுக்கு அப்பால் உள்ள பாடசாலை ஒன்றிற்கு மாற்றிவிட்டார்.

சிவசண்முகநாதன் இடம்மாற்றப்பட்ட பின்பு கந்தசுவாமி கோயிலுக்கு வருவது குறைவு. வார இறுதி நாட்களில் மட்டும் வருவான்.

சிவசண்முகநாதன் மிகவும் நல்லவன், மிகுந்த பக்திமான், ஒழுக்கசீலன், கடின உழைப்பாளி. அதனால் தனக்கொரு மகள் இருந்திருந்தால் அவனுக்குச் செய்து கொடுக்கலாம் என்று கூட கதிரேசன் நினைப்பார்.

சில தினங்களுக்கு முன்பு பொன்னம்பலம் பழமுதிர்ச்சோலைக்கு வந்து கதிரேசனுக்குச் சொன்னார்; “கதிரேசு, உன்னோடு அவன் நல்ல சினேகிதம். நீ அவனுக்குச் சொன்னால் கேட்பான். என்னுடைய தரம், தராதரம், சாதி, அந்தஸ்து, பணம் இவற்றிற்கு ஈடான மாப்பிள்ளை தான் எடுக்கவேண்டும். இவன் பரதேசி, தகப்பன் வீடுகளில் கூலிவேலை செய்பவன். அதனால் தான் ஆட்களை ஏவி இவனை அடிப்பித்தேன். அதிலும் திருந்தாததால் பொய்க்குற்றச் சாட்டுக்களைச் சொல்லித் தூர இடத்திற்கு மாற்றிவித்தேன். இனிமேலும் திருந்தாவிட்டால் வேலையைக்கூட இழக்க வேண்டிய நிலை உண்டாகும். தன்ரை தன்ரை தராதரத்திற்கு ஏற்ற இடங்களிலை தான் உறவுவைக்க வேண்டுமென்று படித்த அவனுக்குத் தெரியாதா..? நான் மகளுக்குப் பெரிய இடத்தில் மாப்பிள்ளை பார்த்துவிட்டேன். இன்னும் ஓரிரு நாட்களில் திருமணம் முடிந்துவிடும். கடவுள் கொடுத்த தொழிலைச் செய்து கொண்டு நிம்மதியாக வாழச்சொல். இசகுபிசகாய் நடந்தால்

நான் கொலை கூடச் செய்யத் தயங்கமாட்டன். இவங்கடை சாதியிலை திருமணம் செய்யிறதை விட என்ரை மகளை நானே கொன்று போடலாம்"

பெருமூச்சுவிட்டார் கதிரேசன். அவர் பொன்னம்பலத்திற்கு எதுவுஞ் சொல்லவில்லை. சொன்னாலும் அவன் கேட்கமாட்டான். அவன் அடிக்கடி கோயிலில் பிரச்சினைப்படுபவன். எதற்கும் அவனைத் தான் முன்வைத்தல் வேண்டும். விஷேட பூசைகள் அவன் வந்த பின்பு தான் தொடங்கவேண்டும். இதனால் பெரும் பிரச்சினைகள் வரும்.

"பாவம் சிவசண்முகநாதன். சிவசண்முகநாதன் மட்டும் விரும்பினால் பரவாயில்லை. ஆரணி அவனைத் தீவிரமாக விரும்புகிறாள். ஒரு சில வாரங்களுக்கு முன் சிவசண்முகநாதன் பழமுதிர்சோலையில் வேலை செய்துகொண்டிருக்கும் போது அவள் அங்கு வந்துவிட்டாள். தான் வீட்டுக்குச் செல்லமாட்டேன் என்று கூறித் தன்னை அழைத்துச் செல்லுமாறு வற்புறுத்தினாள். சிவசண்முகநாதனுக்கு ஒரு சகோதரி இருக்கிறாள். அவளுக்குக் கடன்பட்டே சிவசண்முகநாதன் திருமணம் செய்து வைத்தான். ஓரிரு வருடங்களில் கடனைத் தீர்த்துவிட்டுக் கூட்டிச்செல்கிறேன்" என்றான் சிவசண்முகநாதன்.

அதை அவள் ஏற்கவில்லை. இறுதியாகச் சொன்னாள்; "நீங்கள் தான் எனது கணவர். இன்னொருவரைத் திருமணஞ் செய்து வைத்தார்களானால் நான் தற்கொலை செய்வேன். அதற்கு முன் என்னை அழைத்துச் செல்லுங்கள்"

கதிரேசனின் மனம் அமைதி கொள்ளாது தவித்தது; "இந்தப் பிரச்சினை எப்படி முடியப் போகிறதோ" என்று கலங்கினார்.

அப்போது சிவசண்முகநாதன் வந்தான். அவன் இளைத்துக் களைத்திருந்தான். முகத்தில் முடிவளர்ந்திருந்தது. கதிரேசனைக் கண்டதும் விம்மி விம்மி அழுதான்.

"மகனே, முருகனின் அடியவர்களுக்குப் பயம், அச்சம், கவலை என்பன இருக்காது என்று நான் படித்த

நூல்களெல்லாம் சொல்கின்றன. நீ ஒரு முருகபக்தன். ஏன் வீணாகக் கலங்குகிறாய்...? முருகனிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்துவிட்டு அவரிடம் சரணடை. பாம்பன் சுவாமிகள் அருளிய "குமாரஸ்தவத்தை" ஓது. உனக்கு வந்த துன்பங்கள் எல்லாம் பறந்துவிடும்".

"நான் என்னையே முருகனுக்குக் கொடுத்துவிட்டேன். இப்பொழுது வரும் போது கூடப் பாம்பன் சுவாமியாரது குமாரஸ்தவத்தை ஓதிக்கொண்டு தான் வந்தேன். இப்பொழுது இங்கிருந்தும் ஓதுகிறேன்.." என்று கூறி ஓதத்தொடங்கினான்.

ஓம் ஷண்முக பதயே நமோ நம:
ஓம் ஷண்மத பதயே நமோ நம:
ஓம் ஷட்கிரீவ பதயே நமோ நம:
ஓம் ஷட்கிரீட பதயே நமோ நம:
ஓம் ஷட்கோண பதயே நமோ நம:
ஓம் ஷட்கோச பதயே நமோ நம:
ஓம் நவநிதி பதயே நமோ நம:
ஓம் சுபநிதி பதயே நமோ நம:
ஓம் நரபதி பதயே நமோ நம:
ஓம் சுரபதி பதயே நமோ நம:
ஓம் நடச்சிவ பதயே நமோ நம:
ஓம் ஷடbர பதயே நமோ நம:
ஓம் கவிராஜ பதயே நமோ நம:
ஓம் தபராஜ பதயே நமோ நம:
ஓம் இஹபர பதயே நமோ நம:
ஓம் புகழ்முநி பதயே நமோ நம:
ஓம் ஜயஜய பதயே நமோ நம:
ஓம் நயநய பதயே நமோ நம:
ஓம் மஞ்சுள பதயே நமோ நம:
ஓம் குஞ்சரீ பதயே நமோ நம:
ஓம் வல்லீ பதயே நமோ நம:
ஓம் மல்ல பதயே நமோ நம:
ஓம் அஸ்தர பதயே நமோ நம:
ஓம் சஸ்தர பதயே நமோ நம:
ஓம் ஷஷ்டி பதயே நமோ நம:
ஓம் இஷ்டி பதயே நமோ நம:
ஓம் அபேத பதயே நமோ நம:

| | | | | |
|---|---|---|---|---|
| ஓம் | சுபோத | பதயே | நமோ | நம: |
| ஓம் | வியூஹ | பதயே | நமோ | நம: |
| ஓம் | மயூர | பதயே | நமோ | நம: |
| ஓம் | பூத | பதயே | நமோ | நம: |
| ஓம் | வேத | பதயே | நமோ | நம: |
| ஓம் | புராண | பதயே | நமோ | நம: |
| ஓம் | (ப்)பிராண | பதயே | நமோ | நம: |
| ஓம் | பக்த | பதயே | நமோ | நம: |
| ஓம் | முக்த | பதயே | நமோ | நம: |
| ஓம் | அகார | பதயே | நமோ | நம: |
| ஓம் | உகார | பதயே | நமோ | நம: |
| ஓம் | மகார | பதயே | நமோ | நம: |
| ஓம் | விகாச | பதயே | நமோ | நம: |
| ஓம் | ஆதி | பதயே | நமோ | நம: |
| ஓம் | பூதி | பதயே | நமோ | நம: |
| ஓம் | அமார | பதயே | நமோ | நம: |
| ஓம் | குமார | பதயே | நமோ | நம:'' |

இப்பதிருப்திதானே..?" சிவசண்முகநாதன் சிரித்தான்.

கதிரேசன் சிரித்தார்; "மகனே, பிரமமாய் நின்ற சோதியாகிய சிவபெருமான் தான் ஆறுதிருமுகங்களோடும் பன்னிரு திருக்கரங்களோடும் திருமுருகனாக அவதரித்திருக்கிறார். அதனால் அவரை வணங்கினால் ஆறு தெய்வங்களையும் வணங்கிய பலன் கிடைக்கும் என்பது உனக்குத் தெரியும். பிறகேன் நம்பிக்கையீனப்படுகிறாய். பொறுப்புக்களை நீ சுமந்தால் தான் துன்பம். பொறுப்புக்களை முருகனிடம் விடு. அவன் சுமக்கட்டும்... ".

''நான் எப்போதே விட்டுவிட்டேன் என்பதை நீங்கள் ஏன் உணர்கிறீர்களில்லை'' என்று கேட்டான் சிவசண்முகநாதன்.

''மகனே, மனதைப்பற்றி உனக்குத் தெரியாது. முழுமையான நம்பிக்கை வைத்தாலும் துன்பங்கள் வந்தால் மனம் தடுமாற்றமடையும்...'' என்று கதிரேசன் கூறிக்கொண்டிருக்கையில் சிவசண்முகநாதன் அவசரத்துடன் குறுக்கிட்டுச் சொன்னான்; ''பெரியவரே...

இல்லை. என்தந்தையே.. அதுவும் இல்லை. என் முருகனே, நான் மனம் தளரமாட்டேன். எனது தெய்வம் என்னை ஆட்கொள்ளும்; எனக்குதவும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. ஆரணி தான் எனது மனைவி. விதி வசத்தால் நடக்காது விட்டால் ஆரணி உயிர்வாழமாட்டாள். அதன் பின் நான் ஏன் உயிர்வாழவேண்டும். அதற்கு மேல் அவனால் பேசமுடியவில்லை. விக்கி விக்கி பலமாக அழுதான்.

நம்பிக்கை உள்ளவன் அழமாட்டான். ஆரணியை உனக்கு முருகன் தருவான் என்று நீ நினைக்கிறாய்...''.

அவரைப்பேச விடாது சிவசண்முகநாதன் சொன்னான்; "என்ரை முருகன் தான; எனக்கு அவளைத் தந்தது. மூன்று வருடங்களுக்கு முன்பு நடந்த கந்தசஷ்டி விரதத்தின்போது துவிச்சக்கர வண்டியில் வந்த என்னை வழிமறித்து ஒரு பூப்பொதியை என்னிடம் தந்தாள் ஆரணி. பின்; "நான் கட்டிய மாலையின் அழகைப் பார்த்துவிட்டு முருகனுக்கு அணிந்து அழகு பாருங்கள்" என்றாள்.

வாழை மடலுள் இருந்த மாலையைப் பார்த்தேன். அதற்குள் ஒரு கடிதம் இருந்தது. அதில்; "அன்பரே, கந்தசஷ்டி நன்னாளில் உங்கள் மீது நான்கொண்ட காதலை வெளிப்படுத்துகிறேன். என்னை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்றிருந்தது. நான் முதலில் பயத்தினால் எனது காதலை ஏற்கவில்லை. காலப்போக்கில் எனக்கும் அவள் மீது காதலுண்டாகிவிட்டது. இது முருகனின் திருவிளையாடல். முருகன் கட்டாயமாக எங்களைச் சேர்த்து வைப்பான்".

"சிவசண்முகநாதா.. கட்டாயம் ஆரணியை முருகன் உன்னோடு சேர்த்து வைப்பான். முருகன் காதலித்தவன்.. காதலால் வரும் பிரச்சினைகளை அறிந்தவன். அவன் காதல் தெய்வமடா. அதனால் காதலருக்கு அவன் உதவுவான். இந்து சமயத்தில் சாதிப் பாகுபாடு இல்லை. இந்து சமயத் தத்துவங்கள் எதிலும் சாதியைப் பற்றிச் சொல்லவில்லை. தமிழர்களின் தொன்மையான நூலான தொல்காப்பியத்தில் கூட சாதியைப் பற்றிய குறிப்புக்கள் இல்லை".

சிவசண்முகநாதா, சிவனின் குடும்பத்திற்கும், வள்ளியின் குடும்பத்திற்கும் எவ்வளவு வேறுபாடுகள், வேற்றுமைகள் உண்டு. குறிப்பாகச் சொல்லப் போனால் சிவனது குடும்பம் தெய்வக் குடும்பம். வள்ளியின் குடும்பம் வேடுவக்குடும்பம். அங்கு சாதி பேதம் தகுதி, கௌரவம் பார்க்கப்படவில்லையே.."

"அழகிற்கும், கல்விக்கும், வீரத்திற்கும் சாதிகள் இல்லையென்று இந்து தத்துவ நூல்கள் கூறுகின்றன. பகவத்கீதையில் தேவசேனாதிபதியான முருகன் தான் என்று மகாவிஷ்ணு கூறுகிறார். மகாவிஷ்ணு கண்ணன் அவதாரமெடுத்துக் காதலித்துத் திருமணம் புரிந்தவர். அவர் முருகனின் ஒரு திருமுகமாக இருப்பதாலும், முருகனின் இன்னொரு முகம் வள்ளியை மணம் புணரவந்ததாலும் முருகன் சாதி சமய பேதம் பாராது உனக்கு உதவுவார். கவலைப்படாதே. முதலில் உனது முகத்தைச் சவரஞ்செய்; மகிழ்ச்சியாக இரு. மகிழ்ச்சி தான் நம்பிக்கையின் வடிவம். திருமணத்திற்குத் தயாராகும் மாப்பிள்ளை போல வா. உன்னைத்தேடி பொன்னம்பலம் வருவார். அவரை உனது வீட்டிற்கு அழைத்து வருகிறேன்" என்றார் கதிரேசன்.

ஆண்மயில் பலமாக அகவியது. பின் சிவசண்முகநாதனை உரசியது. அதைக் கண்ட கதிரேசன் சொன்னார்; "முருகன் அகவி நல்லதைச் சொல்லிவிட்டான். நீ போய் முகத்தைச் சவரஞ்செய்" என்றார் கதிரேசன்.

பொன்னம்பலம் ஆரணிக்குத் திருமணஞ் செய்ய நாள் குறித்தார்.

விடிந்தால் திருமணம். சிவசண்முகநாதன் உற்சாகமாகப் பழமுதிர்ச்சோலைக்கு வந்தான்.

கதிரேசன் புன்னகையுடன் வரவேற்றார்; "முருகன் என்னைக் கைவிடமாட்டார். பொன்னம்பலம் தலையால் நடந்தால் கூட இத்திருமணம் நடைபெறாது. நான் முருக பக்தன். ஆரணி முருகனின் அடியவள். இரண்டு அடியவர்களுக்கும் துன்பம் வர முருகன் விடமாட்டான்" என்றான் சிவசண்முகநாதன்.

அப்போது சேனாதிராஜா அங்கு வந்து சொன்னான்; "நான் முன்பு சிவசண்முகநாதன் கடமை புரிந்த

பாடசாலையின் அதிபரைச் சந்தித்தேன். அவர் இத்திருமணம் நடைபெறாது என்று சொன்னார்"

"ஏன்..? எனன காரணம்?'' என்று கேட்டார் கதிரேசன்.

''பெண் பார்க்க வந்தன்று மாப்பிள்ளையின் வீட்டில் வளர்த்த பசுமாடு திடீரென்று இறந்துவிட்டதாம். மாப்பிள்ளையின் மோட்டார் வண்டி இருமுறை விபத்துக்குள்ளாகிவிட்டதாம். நேற்று மாப்பிள்ளையின் பேரனாருக்கு நெஞ்சுவலி வந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராம். மாப்பிள்ளையின் தகப்பன் பெரும் முருக பக்தனாம். முருகன் கோயிலில் பூக்கட்டிப் பார்த்தபோது திருமணம் செய்யக்கூடாதென்று சொல்லப்பட்டதாம். அதனால் மாப்பிள்ளை பகுதி திருமணத்தை வேண்டாம் என்று சொல்கிறதாம். பொன்னம்பலம் இடிந்துபோயிருக்கிறாராம்" என்றான் சேனாதிராஜா.

"என்ரை முருகன் என்னைக் கைவிடமாட்டான் என்று எனக்குத் தெரியும்" என்றான் சிவசண்முகநாதன்.

''முருகன் யாரைக்கைவிட்டவன்.. ஊரிலை ஒருவனைச் சொல்லு பார்ப்பம். சிலவேளை நாளைக்கு மணவறையிலை நீ தான் இருப்பாய்" என்று சிரித்தார் கதிரேசன்.

"முருகன் என்னைத் தூக்கிச் சென்று இருத்துவான்" என்றான் சிவசண்முகநாதன்.

"எல்லாம் மகிழ்வோடு முடியும். மகிழ்வு தான் முருகன்" என்றார் கதிரேசன்.

"நான் வீட்டுக்குச் செல்லவேண்டும்" என்று புறப்பட்டான் சிவசண்முகநாதன்.

கதிரேசன் பழமுதிர்ச்சோலையில் உள்ள கிணற்றில் குளித்துவிட்டுக் கோயிலுக்கு வந்த போது மாலை ஐந்து மணிப்பூசைக்கான காண்டாமணி ஒலித்தது. வானம் இருண்டு கறுத்து மழை சிறிது தூறிக்கொண்டிருந்தது. ஆலய முன்வாசலில் ஆண்மயில் தோகையை விரித்து ஆடிக்கொண்டிருந்தது. அதன் அருகில் வந்த கதிரேசன்;

"முருகா நீ ஆடினால் நல்லதொரு சம்பவம் நடக்கும்" என்று கூறிவிட்டு அதன் நடனத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

"கதிரேசு.. உன்னோடை ஒரு முக்கியமான விடயம் கதைக்க வேண்டும். பழமுதிர்ச்சோலைக்கு வா" என்று கூறிவிட்டுப் பழமுதிர்ச்சோலையை நோக்கி நடந்தார் பொன்னம்பலம்.

இருவரும் வந்து பழமுதிர்ச்சோலையில் இருந்த தாமரைத் தடாகத்தின் கட்டில் அமர்ந்தனர். அமர்ந்தவுடன் பொன்னம்பலம் சொன்னார்; "கதிரேசு, என்னுடைய மகளின் விஷயங்கலெல்லாம் உனக்குத் தெரியும். மாப்பிள்ளை பகுதி சம்மதித்து நாளும் குறித்து விட்டு இப்போது எனது மகள் இராசியில்லாதவளாம். அவள் தம்முடைய வீட்டுக்கு வந்தால் தமது குடும்பம் அழிந்து விடும் என்கிறார்கள். இதனால் எனது மகளின் எதிர்காலம் நாசமாகிவிடுமோ என்று பயமாக இருக்கு. அவள் இராசியானவள். எனது வியாபாரம் அவள் பிறந்த பின்பு பத்து மடங்காக அதிகரித்தது. அவள் வீட்டில் இருந்தால் மகாலட்சுமி இருப்பதைப் போலச் சகல ஐஸ்வரியங்களும் கிடைக்கும். நான் எந்தச் செயலையும் அவளைக் கொண்டே செய்விப்பேன். அவள் தொடக்கி வைத்தால் பொன்னாய்க் குவியும். அப்படியானவளை இராசியில்லாதவள், மூதேவி என்கிறார்கள். அதை என்னாற் பொறுத்துக்கொள்ள முடியவில்லை''. விக்கி விக்கி அழுதார் பொன்னம்பலம்.

கதிரேசன் அவரைப் பார்த்துக்கொண்டிருந்தார். பொன்னம்பலம் என்ன முடிவெடுத்திருக்கிறாரென்று கதிரேசனுக்குத் தெரிந்தது. இருந்த போதும் அவராகக் கதைக்கட்டும் என்று காத்திருந்தார்.

"தகுதி, கௌரவம், பணம், சாதியென்றெல்லாம் பார்த்தன்" பெருமூச்சுவிட்டார் பொன்னம்பலம்.

"கதிரேசு இப்பவும் என்ரை தகுதி கந்தையற்ரை வீட்டை போக என்னை விடுதில்லை. நீங்கள் பெரியவர், தர்மவான், முருகனடியவர், ஆதலால் என்சார்பாகக் கந்தையாவின் வீட்டுக்குச் சென்று கதை. விடிய எட்டு மணிக்கு நாள். அதிலை தாலிகட்ட வேண்டும்" கண்ணீர் மல்கக் கதிரேசனின் கையைப் பிடித்தார் பொன்னம்பலம்.

“நான் போறன். ஆனால்... ஒப்புக்கென்றாலும் நீங்கள் வரவேண்டும்” என்றார் கதிரேசன்.

“வருவன். வராமல் விடமுடியுமே. இரண்டு நாட்கள் போகட்டும்” என்றார் பொன்னம்பலம்.

மறுநாட்காலை எட்டு மணிக்குச் சிவசண்முகநாதன் ஆரணியின் கழுத்தில் தாலி கட்டினான்.

“சிவசண்முகநாதா முருகன் காதல் தெய்வம். அவன் அடியவர்களின் காதலை நிறைவேற்றி வைப்பான்” என்று மணமக்களை ஆசீர்வதிக்கும் போது கதிரேசன் கூறினார்.

## 7

நாலாஞ்சடங்கன்று கந்தசுவாமி கோயிலுக்கு வந்த சிவசண்முகநாதனும் ஆரணியும் முருகனைத் தரிசித்து அர்ச்சனை செய்துவிட்டுப் பழமுதிர்ச்சோலைக்கு வந்தனர். அங்கே கதிரேசன் மயில்களுக்குத் தானியங்கள் தூவிக்கொண்டிருந்தார். சிவசண்முகநாதனும் ஆரணியும் கதிரேசனது பாதங்களைப் பணிந்தனர்.

“நல்லாய் இருங்கள். பெரும் நெருக்கடிக்கு மத்தியில் முருகன் திருவிளையாடல்கள் பல புரிந்து உங்களைச் சேர்த்து வைத்திருக்கிறார். நீங்கள் சகல செல்வங்களும் பெற்று மகிழ்வோடு இருப்பீர்கள்” என்ற கதிரேசன் மண்டபத்துள்ச் சென்று திருநீறும் பரிசுப்பொதியொன்றும் கொண்டுவந்தார்.

அப்போது அங்கே செல்லத்துரை வந்தான். பலகாலமாக அசுரர்களைப் போல மக்களுக்கும் கோயிலுக்கும் பல கொடுமைகள் செய்த செல்லத்துரை சமீபகாலமாகத் தான் திருந்திவிட்டேன் என்று கூறிக் கோயிலுக்குத் தொண்டுகள் பல புரிந்து வருகிறான்.

“சிவா.. இது முருகனின் திருநீறு. திருப்பரங்குன்றத்திற்குச் சென்ற பாலகிருஷ்னன் கொண்டுவந்து தந்தது” என்று திருநீற்றை நீட்டினார் கதிரேசன்.

“நான் உங்களை என் குலதெய்வமான முருகனாகவே கருதுகிறேன். எனது நெற்றியில் பூசிவிடுங்கள்” என்றான் சிவசண்முகநாதன்.

கதிரேசன் இருவருக்கும் நீற்றைப் பூசிவிட்டார்.

இதைப் பார்த்த செல்லத்துரை தனது இடுப்பில் செருகியிருந்த திருநீற்றுப் பையை எடுத்து; “இது திருச்செந்தூர் முருகனின் பிரசாதம். சென்ற வருடம் நான் ஆறுபடை வீடுகளையும் தரிசிக்கச் சென்றபோது கொண்டுவந்தேன். நீ முருகபக்தன். திருமணம் செய்து மனைவியுடன் முதன்முதலாகக் கோயிலுக்கு வந்திருக்கிறாய். திருப்பரங்குன்றத்து நீற்றை அணிந்தது போலத் திருச்செந்தூர் முருகனின் நீற்றையும் அணி” என்று கூறித் திருநீற்றை எடுத்து நீட்டினார்.

‘‘முருகனின் பிரசாதமான திருநீற்றையும் உரியவர்களிடமிருந்து தான் பெறல்வேண்டும். கோயிற் குருக்கள், குரு, சிவனடியார், பெற்றோர் தவிர்ந்த வேறு யாரிடமும் பெறக்கூடாது. நீங்கள் என்னைப் பொறுத்தவரை பெரியவரல்ல. கோயிலுக்கு எவ்வளவு கொடுமைகள் செய்தீர்கள். குருக்களின் பூநூலை அறுத்தீர்கள். பூநூலை அறுப்பது கொலை செய்வதை விடக் கொடுமையானது. அப்படிப்பட்ட ஒருவரோடு கதைக்கவே எனக்கு விருப்பமில்லை;” என்று கோபப்பட்டவன்; “கதிரேசண்ணை நான் பிறகு சந்திக்கிறேன்” என்று கூறிவிட்டுத் தாமரைத் தடாகம் உள்ள இடத்திற்குச் சென்றான். அவனைப் பின் தொடர்ந்து ஆரணி சென்றாள்.

“நல்ல நாளில் தீயவர்களென்றாலும் மதிப்புக்கொடுக்க வேண்டும்” என்றாள் ஆரணி.

“இவன் தீயவன் அல்ல. அரக்கன். இறுமாப்பும், தற்பெருமையும், அளவுக்கதிகமான சினமும், கடுமையான போக்கும், தான் நினைத்தவை தான் சரியானவையென்றும் அதை எல்லோரும் மறுபேச்சுப் பேசாது செய்யவேண்டுமென்று நினைப்பது அசுரகுணம். அசுர இயல்புடையவர்கள் செய்யவேண்டிய நற்செயல்களையும், செய்யக்கூடாத தீயசெயல்களையும் ஒரு போதும் அங்கீகரிக்கமாட்டார்கள். உலகம் தனது செயலுக்கேற்பதான் நடை பெறவேண்டும். தர்மம் செய்பவனும், தெய்வத்தை

வணங்குபவனும் முட்டாள். ஏனென்றால் அவனுக்கு வாழத்தெரியாது என்று நினைப்பவன் செல்லத்துரை. பணத்தாலும் காமத்தாலும் வரும் இன்பங்கள் தான் நிலையானவை என்று அசுரர்கள் நினைப்பதைப் போல அவனும் நினைக்கிறான். நிறைவுபடாத நெடுங்காமம் அவனுள்ளத்தில் குடிகொண்டுள்ளது. காமத்திற்காக ஆடம்பரமாகவும், பெருமைக்காக மதத்துடன் இவன் வாழ்கிறானே தவிர உண்மையாக அவன் திருந்தவில்லை". அசுரர்கள் உருவத்தால் வேறுபட்டது புராண காலத்தில். அந்தக்காலத்தில் இருந்த அசுரர்களுக்குள்ள குணங்கள் அனைத்தும் இவனிடம் தப்பாமல் இருக்கிறது.

"முன்பு கொடுமையான அரக்கனாகக் கோயிலில் நடந்தான். இப்போ சுவாமிவேடம் பூண்ட அரக்கனாக உலாவுகிறான். இவனது வேஷம் காமகுரோத வசப்பட்டதேயொளிய புனிதமானதல்ல. தரையில் சிந்திய அமிழ்தும், தீயவனின் கைப்பட்ட நீறும் ஒரு தன்மையானவை. அதனால் தான் நான் திருநீற்றை வாங்கவில்லை" என்று செல்லத்துரைக்குக் கேட்குமாறு கூறினான் சிவசண்முகநாதன்.

"சிவசண்முகநாதன் கூறியவையெல்லாம் உண்மை. அவனை நான் குறைசொல்ல மாட்டேன். எனது சொல்லை மீறிய பலருக்கு நான் கோயிலடியில் அடித்துள்ளேன். முருகனுக்குக் காலையில் அபிஷேகம் செய்து அலங்கரித்துத் தான் பூசை எட்டு மணிக்கு நடைபெறும். நான் வெளியூருக்குச் செல்லும் போது முருகனை வணங்கிவிட்டுத்தான் போவேன். அன்று காலை ஏழு மணிக்குக் குருக்கள் அபிஷேகம் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது நான் முருகனுக்கு அர்ச்சனை செய்யச் சொன்னேன். அவர் பூசை முடிந்த பின்பு தான் அர்ச்சனை செய்வது மரபு" என்றார். அது தெரியாத நான் குருக்களுக்கு அடித்துவிட்டேன். அது பெரும் பிழை மட்டுமல்ல. தீராத பாவமுமாகும். இப்போ அதை நினைத்துக் கவலைப்படுகிறேன்" என்றான் செல்லத்துரை.

"ஒவ்வொருவரின் குணத்திற்கேற்ற செயல்கள் தான் நடைபெறும். முன்பு நீ வீம்பும் அகங்காரமும் கொண்டு நீதான் பெரியவன் என்ற ஆணவத்துடன் வாழ்ந்தாய்.

அதனால் காமமும் பற்றும் அவாவும் தான் உனது மனதில் நிறைந்திருந்து உன்னை வழிநடத்தின. மனிதன் செயல்களால் செய்வது தான் கொடுமைகள் அல்ல. மனதால் நினைப்பதும் கொடுமை தான். அதனால் ஆன்மாவும், ஆன்மாவில் உறைந்திருக்கும் இறைவனும் துன்பப்படுத்தப்படுவார்கள். சமூகச் சட்ட திட்டங்களைப் பேணாது வாழ்வது அசுரத்தனமானது. ஆசைவசப்பட்டு நிபந்தனைகளுடன் செய்யும் ஆராதனைகளும், தானதர்மங்களும் அசுரத்தனமானவை தான். பயனில் ஆசையும், செயலில் பற்றும் மனதில் அசுரத்தன்மையை வளர்க்கும்" என்றார் கதிரேசன்.

"நான் திருந்த விரும்புகிறேன். நான் செய்த பாவங்கள், நான் தனிமையில் இருக்கும் போது என்னை அச்சுறுத்துகின்றன. அதனால் எனக்கு நிம்மதியில்லாமல் இருக்கிறது. அதைவிட எனது மனைவி பிள்ளைகள் கூட என்னை நம்புகிறார்களில்லை" அழுதான் செல்லத்துரை.

"ஒருவன் தான் செய்த பாவங்களை எண்ணி அவை தன்னைப் பாதிக்கும் என்று நினைத்தானேயானால் அவன் திருந்த ஆரம்பித்துவிட்டான் என்று நம்பலாம். ஆனால் சமூகத்தில் உள்ள பலர் தமது எண்ணங்கள் நிறைவேறுவதற்காக வேஷம் போட்டிருக்கிறார்கள். அதனால் தான் பலர் அதை நம்பவதில்லை. எல்லாம் வினைப்பயன். செய்த செயல்களின் பயன் நீங்கப் பல காலஞ்செல்லும். அது வரை நீ பொறுத்திருத்தல் வேண்டும்" என்றார் கதிரேசன்.

"என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?' என்று கேட்டான் செல்லத்துரை.

"முருகன், அடியவர்களின் வினைகளை அறுப்பவன். துன்பங்களைக் கூறினால் அதை விலக்கி வைப்பவன். சூரன் தன்னை விட வலிமையுள்ளவன் எவருமில்லை என்று நினைத்துத்தான் போரிட்டான். போரின் போது முருகனை விடப் பெரியவர் யாருமில்லை எனக் கண்டு கொண்டான். அதனால் அவனைப் பணிந்து அவனைக் கடவுளாக ஏற்றான். அதனால் அவன் செய்த பாவங்கள் யாவும் விலகின"

"சிவன் தான் முருகனாக அவதாரம் எடுத்தார். பின் முருகன் சிவனிடம் வேலைப் பெற்றார். வேல் சிவசக்தி.

சிவசக்தி என்பது திருவருள். இந்தத் திருவருள் அரக்கக்குணமான ஆணவத்தை அழிக்கும். சங்கார மூர்த்தியான சிவனிடத்திலிருந்து தான் உயிர்கள் தோன்றின. பின் அவை சிவனிடத்தில் ஒடுங்குகின்றன. சிவன் தான் அழித்தற்கடவுள். அழித்தலைச் சிவனைத்தவிர வேறு எவருஞ் செய்ய முடியாது ஆனால் வேல் செய்யும். வேல் முருகனது படைக்கலமல்ல சிவசக்தி. அது தான் சூரனை அழித்தது. சூரனின் ஆணவத்தை ஒடுக்கி அவனின் ஆன்மாவை வேலும் மயிலுமாக்கித் தன்னோடு சேர்த்துக்கொண்டது. இந்த இடத்தில் முத்தியின் தத்துவமும் கூறப்படுகிறது"

"ஆன்மாக்களைத் திருவருள் சிவத்தோடு சேர்க்கும். சிவசக்தியான வேல் சூரனின் ஆன்மாவை முருகனுடன் சேர்த்துக்கொண்டமையால் முருகனைச் சங்கார முருகன் என்றும் சொல்லலாம்".

"கொடுமைகளைத் தவிர வேறு எதையும் செய்தறியாத சூரனின் ஆன்மாவை ஆட்கொண்ட வேல் உனது கொடுமைகளையும் போக்கி உன்னை ஆட்கொள்ளும்" என்றார் கதிரேசன்.

"கேட்பதற்குச் சந்தோசமாக இருக்கிறது. நடைபெற வேண்டும்" என்றான் செல்லத்துரை.

"இறைவன் மீது நம்பிக்கை வைத்துச் செய்யப்படும் எந்தச் செயலும் தோல்வியில் முடிவடைவதில்லை. உயிர்களைத் துன்புறுத்தாத தன்மையும், வாய்மையும், இனிமையும் நலனும் கூடிய வார்த்தைகளும் ஒருவனை இறைவன் பால் எடுத்துச் செல்லும். யார் எதைச் சொன்னாலும், யார் எதை நினைத்தாலும் கவலை கொள்ளாது முருகன் என்னை வந்தடைய வேண்டுமென்று செயலாற்றுபவன் முருகனைச் சென்றடைவான்".

"இந்த உலகத்தில் உள்ளவர்கள் என்ன நினைக்கிறார்களென்று நீ ஏன் கவலைப்படுகிறாய்..? உனது செயல் தூய்மையானதாக இருந்தால் அதனால் வரும் பயன்களும் தூய்மையானதாக, நன்மை தருவனவாக இருக்கும். அரக்கத்தனமான குணங்களுடைய தீயவர்கள்

திருந்தி உலகிற்கு நன்மை செய்ய வேண்டும் என்று தான் முருகன் விரும்புவான்".

"இறைவன் உலகில் உள்ள எல்லா உயிர்கள் மீதும் சமமாகவே இருக்கிறான். நாம் தான் இறைவனைச் சந்தேகிக்கிறோம். முன்பு வாழ்ந்த ஞானிகள், முனிவர்கள், ரிஷிகளின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் அவர்களிற் பலர் அரக்கத்தனம் மிக்கவர்களாக வாழ்ந்ததை நாம் கண்டுகொள்ளலாம்".

"தேவையுள்ள இடத்திற்குத்தான் பொருட்கள் தேவை. ஒரு கிராமத்தில் கிணறுகள் இல்லை. அக்கிராம மக்கள் நெடுந்தூரம் சென்று நீர் பெற்று வருகின்றனர். தருமம் செய்ய விரும்புகின்றவன் அந்தக் கிராமத்தில் ஓரிரு கிணறுகளை வெட்டிக் கொடுத்தல் வேண்டும். இதைவிட்டு விட்டுக் கிணறுள்ள கிராமத்துக் கோயிலுக்குத் தீர்த்தக்கிணறு வெட்டிக்கொடுக்கலாமா..?"

"நல்லவர்கள் எப்போதும் நல்லவர்களாக, இறை சிந்தனையுள்ளவர்களாக இருப்பார்கள். தீயவர்கள் தான் இறை சிந்தனையும், தொண்டு மனப்பான்மையும் இல்லாதவராக இருப்பார்கள். இறைவனின் நோக்கம் எல;லோரும் நல்லவர்களாக இருக்க வேண்டுமென்பதே. அதனால் தீயவர்கள் திருந்தவதற்குச் சந்தர்ப்பமேற்படுத்திக் கொடுப்பார். முருகன் குழந்தை; பிள்ளை; இளைஞன்; குரு என்றெல்லாம் இருக்கிறான். நீ பாலமுருகனை வழிபடு. அவன் சூரனை அழித்தது போல உனது மனதில் உள்ள அசுரத் தன்மையைத் தனது வேலால் அழித்து உன்னைக் காப்பாற்றுவான்" என்றார் கதிரேசன்.

"சரி" என்றான் செல்லத்துரை.

"முதலில் உனது மனதில் முருகனை இருத்து. முருகன் உள்ளத்தில் வந்தமர்ந்தால் உனது மனம் தீயவற்றை எண்ணாது. தீயவற்றை எண்ணாவிட்டால் உனது மனம் சுத்தப்படும். சுத்தமான மனதில் களங்கமிராது. அதனால் உனக்கு சூதாடும் எண்ணம் வராது; மது மாமிசம் உண்ணும் நினைவு வராது. ஈஸ்வர நிந்தனை செய்ய மனம் விடாது. அதனால் ஒழுக்கமாக வாழவேண்டும் என்ற

எண்ணம் உண்டாகும். இது தான் சமயி ஆவதற்கான முதற்படி''

"அடுத்து பயனை விரும்பாது செயல்களைச் செய்தல் வேண்டும். செயல்களைச் செய்யும் போது விமர்சனங்கள் உண்டாகும். விமர்சனங்களை கவனத்தில் எடுக்கக்கூடாது. அவற்றைக் கவனத்திலெடுத்தால் அவற்றிற்குப் பதில் கூறுவதிலும், அவற்றை எண்ணிக் காலம் கழிப்பதிலுமே மனம் அக்கறைகொள்ளும். விமர்சனங்கள் உண்மையாக இருந்தால் திருத்திக்கொள்ளல் வேண்டும். பொய்யாக இருந்தால் அவற்றைக் கவனத்தில் எடுத்தல் கூடாது. இப்படிப் படிப்படியாக இறைசிந்தனையை உண்டாக்கிக் கொள்ளல் வேண்டும். உடனே இவற்றையெல்லாம் செய்ய முடியாது. படிப்படியாக மெல்ல மெல்லத்தான் செய்தல் வேண்டும். மன அமைதி, அன்பு, மௌனம், தன்னடக்கம், தூய நோக்கம் என்பன இறைவனை அடையும் மார்க்கங்களாகும்" என்றார் கதிரேசன்.

"நான் ஏராளமான பாவங்களைச் செய்துவிட்டேன்" அழுதான் செல்லத்துரை.

"அதைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருப்பதால் காரியம் நடைபெறாது. பணம் உள்ளவன், தன்னிடம் பணம் இருக்கிறது. வீடு கட்டவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருந்தால் வீடு கட்டப்படுமா...? செயலில் இறங்கவேண்டும். நீ முதலில் செயலில் இறங்கு" என்று சொல்லிவிட்டு எழுந்தார் கதிரேசன்.

"உங்களோடு கதைத்துக்கொண்டிருப்பது ஆறுதலாக இருக்கிறது" என்று சொல்லிவிட்டு எழுந்து கோயிலை நோக்கி நடந்தான் செல்லத்துரை.

செல்லத்துரை சென்றதும் சிவசண்மகநாதனும் ஆரணியும் வந்தனர்.

"இவனுக்குச் செய்யும் உபதேசம் ஓட்டைக் குடத்துள் விட்ட நீர்தான்" என்றான் சிவசண்முகநாதன்.

"நீ ஓர் ஆசிரியன். இப்படிக் கதைக்கக்கூடாது. அதை விட முருகனின் அடியவன். அதனால் உனக்குக் கோபம் வரக்கூடாது. முருகன் அன்புள்ளவன்; கருணையுள்ளவன்; மோகமுள்ளவன்; வினைகளை

அறுப்பவன்; அள்ளிக்கொடுப்பவன்; நமர் பிறர் என்று பாகுபாடு காட்டாதவன். அப்படியானவனின் அடியானான நீயும் அப்படி இருக்கப்பார். ஆணவம் அறிவை மயக்கும்; வினையைப் பெருக்கும். அறியாமையால் ஒருவன் கீழ்த்தரமாக நடந்தால், அவனை நாமும் கீழ்த்தரமாக நடத்தினால் இருவருக்குமிடையில் வித்தியாசம் இல்லையே. இனிமேலாவது இப்படியான தவறுகள் ஏற்படாமல் நடந்துகொள்”

“மகனே, சரவணபவ என்ற ஆறு எழுத்துக்கள் முருகனின் ஆறுமுகங்களையும் குறித்துப் பின் ஆறு தெய்வங்களாகின்றன. ‘சரவணபவ’ என்ற ஆறு எழுத்தும் பின் ‘முருகா’ என்ற மூன்று எழுத்துக்களாகச் சுருங்குகின்றன. முருகா என்ற மூன்றெழுத்திலொன்று கணங்களின் தலைவனான விநாயகரைக் குறிப்பது. சிவனையும் சக்தியையும் முருகனையும் குறிப்பது இரண்டாவதெழுத்து. மூன்றாவது எழுத்து மகாவிஷ்ணுவையும் சூரியனையும் குறிப்பது. அதனால் “முருகா” என்று ஒருமுறை அழைத்தால் ஆறு தெய்வங்களையும் அழைப்பதாகக் கொள்ளலாம். எனவே அன்பு, கருணை, அருள், பரிவு, காதல், இன்பம் என்பவற்றை அடியவர்களுக்கு அருளும். முருக பக்தர்கள் கோபங்கொள்ளக்கூடாது” என்றார் கதிரேசன்.

“சரி இனிமேல் அப்படி நடக்கமாட்டேன்” என்று கூறிவிட்டு நடந்தான் சிவசண்முகநாதன். அவனின் பின்னால் ஆரணியும் மயில்களும் சென்றன.

## இந்நூலாசிரியரின் பிற நூல்கள் .........

| | |
|---|---|
| திருக்குறள் கதைகள் | 24 தொகுதிகள் |
| ஆத்திசூடிக் கதைகள் | 04 தொகுதிகள் |
| சிறுவர் கதைகள் | 04 தொகுதிகள் |
| இன்பத்தை அள்ளித்தரும் இந்து மதம் | 10 தொகுதிகள் |
| நாவல்கள் | 10 தொகுதிகள் |
| சிறுகதைத்தொகுதி | 01 தொகுதி |
| திருவருட்பயன் கதைகள் | 01 தொகுதி |
| பகவத்கீதை கதைகள் | 01 தொகுதி |
| சிவஞானபோதம் | 01 தொகுதி |
| விளக்கம் உரை | |
| அன்பான வேண்டுகோள் | 01 தொகுதி |
| மாயை பற்றிய தத்துவங்கள் | 01 தொகுதி |
| பெரியபுராணம் | 01 தொகுதி |
| விநாயகர் புராணம் | 01 தொகுதி |

# பின்னட்டை

(சன்னிதி கோவிற் படமும் ஆறுமுகங்களுடன் முருகன் படமும்)